www.panmugam.com

# பண்முகம்.com

ஏப்ரல் - 2026

மலர்-2 இதழ்-4




விருப்ப சந்தா
ரூ.50 செலுத்த
ஸ்கேன் செய்யவும்
MS PADMA MEDIA HOUSE

# மருந்துகள் என்றால் என்ன?

www.panmugam.com
# பன்முகம்.com
மலர்-1 இதழ்-12




## உங்கள் படைப்புகளை அனுப்பிவிட்டீர்களா?
## ஏப்ரல் 2026

### பன்முகம் பல்சுவை மாத இதழ்

| | | |
|---|---|---|
| கவிதைகள் | 15 வரிகளுக்கு மிகாமல் | சிறந்த 3 கவிதைகளுக்கு தலா ரூ100 பரிசு |
| சிறுகதைகள் | 1200வார்த்தைகளுக்கு மிகாமல் | சிறந்த கதைக்கு ரூ500 பரிசு. |
| கேள்விகள் | எதைப் பற்றி வேண்டுமானாலும் கேட்கலாம். | சிறந்த கேள்விக்கு ரூ100 பரிசு. |
| கட்டுரை | 1200வார்த்தைகளுக்கு மிகாமல் | |
| திரை அனுபவம் | 300வார்த்தைகளுக்கு மிகாமல் | |
| நூல் அறிமுகம் | 300வார்த்தைகளுக்கு மிகாமல் | |

அனுப்பவேண்டிய முகவரி
tamilnaduepaper@gmail.com

கடைசிநாள்
**20.04.2026**

தொடர்புக்கு
**9337501889**

**படைப்புகளை அனுப்பும்போது உங்கள் பெயரையும், அலைபேசி எண்ணையும் தவறாமல் படைப்புக்குக் கீழ் குறிப்பிடவும்**

**அச்சு இதழ் ஆண்டு சந்தா Rs.800**
**மின்னிதழ் ஆண்டு சந்தா Rs.300**
**G-pay 9337501889**




# துணுக்குகள்

- நண்டுக்கு தலை இல்லை
- ஆமைக்கு பற்கள் இல்லை
- வண்ணத்துப்பூச்சிக்கு வாய் இல்லை
- நட்சத்திர மீனுக்கும் மூளை இல்லை
- அண்ணாச்சி பழத்திற்கு விதைகள் இல்லை
- காந்தியடிகள் விமானத்தில் பயணம் செய்தது இல்லை
- பறவைகளுக்கு வியர்வை சுரப்பிகள் இல்லை
- யமுனை ஆறு கடலில் கலப்பது இல்லை
- ஜோர்டான் நதியில் மீன்கள் இல்லை
- சிங்கப்பூரில் காக்கைகள் இல்லை
- ஹவாய் தீவில் பாம்புகள் இல்லை
- மலை பம்புகளுக்கு விஷம் இல்லை
- உத்தரப் பரதேசத்தில் தென்னை மரங்கள் இல்லை
- கடலில் முதலைகள் இருப்பதில்லை
- யானையின் துதிக்கையில் எலும்புகள் இல்லை
- கிவி பறவைகளுக்கு இறக்கைகள் இல்லை
- சிங்கமும் புலியும் ஒரே காட்டில் வாழ்வது இல்லை
- அத்தி பலா மரங்கள் பூப்பது இல்லை
- அரேபியாவில் ஆறுகள் இல்லை
- அண்டார்டிகாவில் மரங்கள் இல்லை
- இந்தியாவில் எரி மலைகள் இல்லை
- பூட்டானில் திரை யரங் குகளில் இல்லை
- நேபாளத்தில் பகலில் மழை பெய்வது இல்லை






– நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி



# பெற்றால்தான் பாசம் வருமா?

அந்த ஊர் ஒரு சிறிய கிராமம். அங்கு மனிதர்களின் மனங்களை விட, மற்றவர்கள் வீட்டைப் பற்றிப் பேசும் நாக்குகள் மிகவும் நீளமானவை.

மாணிக்கம் மரகதம் தம்பதிக்குத் திருமணமாகிப் பத்து வருடங்கள் ஆகியும் மழலைச் சத்தம் கேட்கவில்லை. ஊரே அவர்களைப் பரிதாபமாகவும், சில சமயம் ஏளனமாகவும் பார்த்தது.

இறுதியில், ஒரு மனநிறைவோடு அவர்கள் ஒரு முடிவெடுத்தனர். அனாதை இல்லத்திலிருந்து ஒரு பச்சிளம் ஆண் குழந்தையைத் தத்தெடுத்தனர். அவனுக்கு 'கதிர்' என்று பெயரிட்டனர்.

கதிர் வளர வளர, அவனுடன் சேர்த்தே அந்த ஊரின் வதந்திகளும் வளர்ந்தன.

"என்னதான் இருந்தாலும் ரத்தம் மாதிரி வருமா? யாரோ பெத்த புள்ளை, நாளைக்குவளர்ந்துட்டு இவங்களை அனாதையா விட்டுட்டுப்போகாதுன்னு என்ன நிச்சயம்?" என்று திண்ணையில் உட்கார்ந்து வெற்றிலை போடுபவர்கள் பேசிக் கொண்டார்கள்.

ஒருநாள், கதிர் பள்ளியிலிருந்து அழுது கொண்டே ஓடி வந்தான்.

"அம்மா... ரவி சொல்றான், நான் உன்னோட நிஜமான புள்ளை இல்லையாம். யாரோ குப்பையில போட்டத நீங்க எடுத்துட்டு வந்தீங்களாம். அப்படியாமா?"

மரகதத்தின் நெஞ்சு சுளீரென்றது. கதிரை அள்ளி அணைத்துக்கொண்டார். "கதிர், பெத்தவங்க எல்லாரும் அம்மா இல்லைடா. யாரு உன்னைத் தன்னோட உயிரா நினைச்சு வளர்க்குறாங்களோ அவங்கதான் அம்மா. நீ என் வயித்துல பிறக்கல, என் மனசுல பிறந்திருக்க. இதுக்கும் மேல உனக்கு என்ன வேணும்?"

மாணிக்கம் குறுக்கிட்டு, "கதிர், இந்த உலகம் நிறைய பேசும். ஆனா, நீ என்னவாகப் போறங்கிறதுலதான் பதில் இருக்கு. படிச்சு பெரிய ஆளாகு, அப்போ இந்த வாய் எல்லாம் தானா மூடும்," என்றார் உறுதியுடன்.

கதிர் வளர்ந்து கல்லூரிக்குச் சென்றான். மாணிக்கம் ஒரு சாதாரண விவசாயி. கதிரின் படிப்புச் செலவுக்காகத் தனது நிலத்தின் ஒரு




பகுதியை அடமானம் வைத்தார்.

ஒருநாள் மரகதத்தின் உறவினர் ஒருவர் வீட்டுக்கு வந்திருந்தார். "ஏன் மாணிக்கம், இல்லாத காசைச் செலவு பண்ணி இந்தத் தத்துப் புள்ளையைப் படிக்க வைக்கணுமா?

நாளைக்கு இவன் பெரிய ஆளானதும் தன் சொந்தக்காரங்களைத் தேடிப் போயிட்டா நீங்க என்ன பண்ணுவீங்க? அதுக்கு பதிலா ஒரு நிலத்தை வாங்கிப் போடுங்க, உங்க வயசான காலத்துக்கு உதவும்."

கதிர் இதைக் கதவோரம் நின்று கேட்டுக் கொண்டிருந்தான். அவனுக்குள் வேதனை முட்டியது. அன்று இரவு அவன் தன் தந்தையிடம் சென்றான்.

"அப்பா, நான் படிப்பை நிறுத்திட்டு வேலைக்குப் போகட்டுமா? எனக்காக நீங்க நிலத்தை அடமானம் வச்சது எனக்குப் பிடிக்கல."

மாணிக்கம் சிரித்தார். "கதிர், விதைக்கிறப்போ கஷ்டமாத்தான் இருக்கும். ஆனா அது மரமாகி நிழல் கொடுக்கும்போது வர்ற சந்தோஷம்இருக்கே... அதுக்கு ஈடு இணையே இல்லை. நீ எனக்குப் புள்ளை இல்ல, நீ என் கௌரவம். படிச்சு முடி."

காலம் உருண்டோடியது. கதிர் சென்னையில் ஒரு பெரிய நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தான். ஊரில் பேச்சு மாறியது. "பார்த்தியா, வளர்த்த கடனுக்காகப் பட்டணத்துக்கு ஓடிட்டான். இனிமே இந்த வழியே வரமாட்டான்," என்றார்கள்.






துரதிர்ஷ்டவசமாக, அதே சமயம் மாணிக்கத்திற்கு முடக்குவாதம் ஏற்பட்டுப் படுத்த படுக்கையானார். மரகதம் செய்வதறியாது திகைத்தார். கதிரிடம் போனில் சொல்ல வேண்டாம் என்று மாணிக்கம் தடுத்தார். "அவன் இப்பதான் வேலைக்குச் சேர்ந்திருக்கான், தொந்தரவு செய்யாதே."

ஆனால், இரண்டு நாட்களில் கதிர் வீட்டிற்கு வந்தான். தன் கை யில் இருந்த ராஜினாமா கடிதத்தைக் காட்டினான்.

"ஏண்டா... நல்ல வேலையை விட்டுட்டு வந்திருக்க?" என்று மரகதம் பதறினார்.

"அம்மா, அங்க வேலை செஞ்சா எனக்குப் பணம் கிடைக்கும். ஆனா என் அப்பாவுக்கு இப்போ நான்தான் வேணும். நான் இங்கேயே ஒரு சின்னத் தொழில் பண்ணிக்கிட்டு அப்பாவைக் கவனிப்பேன்."

ஊர்க்காரர்கள் இதையும் விட்டுவைக்கவில்லை. "பார்த்தியா, வேலை போயிடுச்சுன்னு சாக்கு சொல்லித் திரும்பி வந்துட்டான். இவன் உருப்பட மாட்டான்."


ஏழு வருடங்கள் கழிந்தது. ஒரு நாள் ஊரே அதிர்ந்தது. ஊர் ஊராட்சியின் சார்பாக ஒரு பெரிய விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக மாவட்ட ஆட்சியர் வந்திருந்தார்.

அவர் மேடையில் பேசும்போது, "இந்த ஊர்ல ஒருத்தர் இருக்காரு, அவர் பேர் மாணிக்கம். அவர் தத்தெடுத்து வளர்த்த தன் மகன் கதிரை, ஒரு சாதாரண பையனா இல்லாம இல்லாம, ஒரு சாதிக்கப் பிறந்தவனா மாத்தியிருக்காரு. கதிர் இன்னைக்கு என் துறையில ஒரு பெரிய அதிகாரியா பதவி உயர்வு வாங்கி யிருக்காரு. அதுமட்டுமில்ல, இந்த ஊர்ல இருக்கிற ஏழை மாணவர் களுக்காக ஒரு இலவச ஆரம்ப பள்ளியையும் அவரே கட்டிக் கொடுக்கப்போறாரு" என்றார்.

கூட்டம் நிசப்தமானது. மேடைக்கு மாணிக்கத்தையும் மரகதத்தையும் கதிர் அழைத்து வந்தான். கதிர் மைக்கைப்பிடித்தான்.

"இங்க நிறைய பேர் சொன்னீங்க, நான் தத்துப்பிள்ளைன்னு. ஆமா, நான் தத்துப்பிள்ளை தான். ஆனா, என் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் நான் 'உதிரம்' இல்ல, அவங்களோட 'உயிர்'. அவங்க என்னை ஒரு விதையா வளர்த்தாங்க. இன்னைக்கு நான் ஒரு மரமா நிக்கிறேன்னா, அதுக்கு அவங்க ஊத்துன அன்பும் கண்ணீரும் தான் காரணம்."

மாணிக்கத்தின் கண்கள் கலங்கின. அவர் எழுந்து நடக்க முடியாமல் தள்ளாடியபோது, கதிர் குனிந்து தன் முதுகில் தன் தந்தையைச் சுமந்துகொண்டு மேடையிலிருந்து இறங்கினான்.



அன்று ஏளனம் பேசிய ஊர்க்காரர்கள், "மாணிக்கம் என்ன புண்ணியம் பண்ணாரோ, இப்படி ஒரு புள்ளை கிடைக்க..." என்று பேசத் தொடங் கினர்.

பாசம் என்பது ரத்த சம்பந்தத்தில் இல்லை, அது பகிரப்படும் அன்பிலும், செய்யும் தியாகத்தில் தான் இருக்கிறது என்பதை ஊர் மக்கள் உணர்ந்தார்கள்.

– மாலதி சந்திரசேகர்

# சமையலறை டிப்ஸ்!

சேனைக்கிழங்கை வேக வைக்கும் முன் ஒரு வெறும் பாத்திரத்தை அடுப்பில் வைத்து சிறிது உப்புப் போட்டு வெடிக்கும் வரை வறுக்கவும். பிறகு நீர் ஊற்றி கொதி வந்ததும் கிழங்கைப் போடவும். விரைவில் பதமாக வெந்து பக்குவமாகவும், சுவையாகவும் இருக்கும்.

●●●

கொத்தமல்லி, கறிவேப்பிலை, வெந்தயகீரை வகைகளை உடனே ஆய்ந்து காற்று வெளிச் சத்தில் பிளாஸ்டிக் டப்பாவில் போட்டு வைத்தால் ஒரு வாரம் ஆனாலும் கெடமால் இருக்கும்.

●●●

தேங்காய் சாதம், எலுமிச்சை சாதம் போன்ற கலந்த சாதங்கள் செய்யும் போது பொட்டுக்கடலையை நன்கு வறுத்து போட்டு கிளறினால் மிகவும் சுவையாக இருக்கும்.

●●●

காரம் சேர்த்து செய்யும் பலகாரங்களுக்கு காரப்பொடி போடாமல், பச்சை மிளகாய் மற்றும் காய்ந்த மிளகாய் உடன் சிறிது தண்ணீர்; சேர்த்து அரைத்து, வடிகட்டி, அந்த தண்ணீரைப் பயன்படுத்தினால் பலகாரங்கள் சுவையாகவும், நல்ல நிறமாகவும் இருக்கும்.

●●●

கேரட்டை மெலிதாக சீவி, தக்காளியுடன் லேசாக வதக்கி, உப்பு போட்டு சாதத்துடன் கலந்து குழந்தைகளுக்கு கொடுத்து அனுப்பி னால் சத்தான, கலர்ஃபுல் சாதம் தயார்.

●●●

துளசி இலைகள் போடப்பட்ட நீரை தினமும் குடித்து வந்தால் தொண்டைப் புண் ஏற்படாமல் தடுக்கலாம்.

●●●

இரவு நேரங்களில் சமையலறையில் ஜீரோ வாட் பல்பை போட்டு விட்டால், சமையலறையில் கரப்பான் பூச்சி நடமாட்டம் குறையும்.

●●●

கேக் செய்யும் போது கலவையில் சிறி தளவு தேன் சேர்த்தால் கேக் சுவையாகவும், மிருது வாகவும் இருக்கும்.

●●●

சுக்குப்பொடியுடன் வெல்லம், தேன் இரண் டையும் சேர்த்து நன்கு கலந்து சிறுசிறு உருண் டைகளாக பிடித்து சாப்பிடலாம். சுவையாக இருப்பதோடு, சுக்கு ஜீரண சக்திக்கு நல்லது.

●●●

கீரை, வெண்டைக்காய், வேக வைக்கும் போது பாத்திரத்தை சிறிது திறந்து வைத்தால் காயின் பசுமை நிறம் மாறாமல் இருக்கும்.

●●●

- Govinda rajan



# சாதனைப் பெண்

"படிப்பு கிடையாது" என்று தீர்ப்பு எழுதிய ஜாதகத்தை கிழித்து, 41வது வயதில் டாக்டரேட்டுக்கு நடந்துசென்ற அம்பிளி.

இஸ்திரி வேலை செய்து கொண்டே டாக்டரேட் பெற்ற மகிழ்ச்சியில் உள்ளார் 41 வயதான அம்பிளி.

கேரளாவில் காருகுளங்கரா பகுதியைச் சேர்ந்த மாளியேக்கல் பரம்பில் வீட்டில் வசிக்கும் அம்பிளி, வாழ்க்கை சிரமங்களுக் கிடையிலும் இந்த சாதனையை எட்டியுள்ளார்.



19 வயதில் பிரீடிகிரி படித்துக் கொண்டிருந்த போது தந்தையை இழந்தார். அதன்பின் அம்பிளியும், அவரின் அம்மாவும் மட்டும்தான். தந்தையின் வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டு வாழ்க்கையை முன்னேற்றினார்.

திருமண வாழ்க்கையும் சவால்களால் நிரம்பியது. கல்வி குறைவு, வரதட்சணை வழங்க முடியாத நிலை ஆகிய காரணங்களால் தொடர்ந்து அவமதிப்பும், துன்புறுத்தல்களும் அனுபவிக்க நேரிட்டது. இறுதியில் ஒரு பெண்ணும் தாங்க முடியாத நிலை வந்தபோது அந்த வீட்டை விட்டு வெளியேறினார்.

ஆனால் அவர் உடைந்துவிடவில்லை.

இஸ்திரி கடையில் வேலை செய்தபடியே படிப்பைத் தொடர்ந்து சென்றார். "இவருக்கு கல்வி இல்லை" என்று கூறிய ஜாதகத்தை கிழித்து எரித்தார் – அதுவே அவரின் மனவலிமையின் சின்னமாகியது.

2008ஆம் ஆண்டு காலிக்கட் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பில் சேர்ந்த அவர், 2013ல் மலையாளத்தில் பட்டமும் முதுநிலையும் பெற்றார். பின்னர் கிறிஸ்ட் கல்லூரியில் ஆசிரியராகவும், சுயநிதி பிரிவிலும் பணியாற்றினார்.

அங்கு பேராசிரியர்கள் டாக்டர் செபாஸ்டியன் ஜோசப் மற்றும் டாக்டர் சி.வி. சுதீர் ஆகியோரின் ஊக்கத்துடன், 2016ல் சிறுகதைகள் தொடர்பான ஆய்வில் ஆராய்ச்சி மாணவியாக சேர்ந்தார்.

இதற்கிடையிலும் இஸ்திரி வேலை நிறுத்தப்படவில்லை. கேரளவர்மா கல்லூரியின் டாக்டர் எம்.ஆர். ராஜேஷ் அவர்களின் வழிகாட்டுதலில் ஆய்வு செய்து, இறுதியில் டாக்டரேட்டை பெற்றார்.






# தோசையும்! ஆன்மிக அதிசயமும்!

நாம் தினமும் சாப்பிடும் உணவுகளில் கூட ஆழமான ஆன்மிக அர்த்தங்கள் மறைந்திருக்கின்றன என்பதை பலர் கவனிக்கவே மாட்டார்கள். அந்த வகையில் தமிழர்களின் பாரம்பரிய உணவுகளில் மிகவும் முக்கியமானது தோசை.

சாதாரணமாக தோன்றும் இந்த தோசை உணவில் கூட நவகிரகங்களின் அடையாளங்களும், பிரபஞ்சத்தின் தத்துவங்களும் மறைந்திருக்கின்றன என்று பழமையான ஆன்மிக பாரம்பரியங்கள் கூறுகின்றன.

### தோசையில் இருக்கும் நவகிரக தத்துவம்

ஒரு தோசை தயாராகும் வரை பல பொருட்களும் பல செயல்களும் ஒன்றோடு ஒன்று இணைகின்றன. அந்த ஒவ்வொரு கூறிலும் ஒரு கிரகத்தின் தத்துவம் அடங்கியிருக்கிறது என்று ஆன்மிக அறிஞர்கள் விளக்குகின்றனர்.

### அக்னி – சூரிய பகவன்

தோசையை சுட பயன்படும் அக்னி சூரிய பகவானின் சக்தியை குறிக்கிறது. சூரியன் உலகிற்கு ஒளியும் சக்தியும் அளிப்பது போல, அக்னி தோசையை சமைத்து உயிர் கொடுக்கிறது.

### அரிசி – சந்திர பகவன்

தோசை மாவின் முக்கியமான பொருள் அரிசி. இது சந்திரனின் குணத்தை குறிக்கிறது. சந்திரன் மன அமைதியையும், சாந்தத்தையும்



தருவான். அதுபோல அரிசி உடலுக்கு ஆற்றலையும் சமநிலையையும் தருகிறது.

### உளுந்து – ராகு மற்றும் கேது

தோசை மாவில் சேர்க்கப்படும் உளுந்து சாயாகிரகங்களான ராகு மற்றும் கேதுஆகியவற்றின் சக்தியை குறிக்கிறது என்று கூறப்படுகிறது. இவை மனித வாழ்க்கையில் நிகழும் மாற்றங்களையும் கர்ம விளைவுகளையும் குறிக்கும்.

### வெந்தயம் – புதன் பகவன்

தோசை மாவில் சிறிதளவு சேர்க்கப்படும் வெந்தயம், புத்திசாலித்தனத்தையும் அறிவையும் குறிக்கும் புதன் பகவானின் தத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. வெந்தயம் உடலுக்கும் மனதுக்கும் சுத்திகரிப்பு தரும் தன்மை கொண்டது.

### தோசைக்கல் – சனி பகவன்

தோசை சுட பயன்படும் இரும்பு தோசைக்கல், சனி பகவானின் அடையாளமாகக் கருதப்படுகிறது. சனி நிலைத்தன்மை, பொறுமை மற்றும் ஒழுக்கத்தை குறிக்கிறான். இரும்பு போல உறுதியான வாழ்க்கையை நினைவூட்டுகிறது.

### தோசையின் சிவப்பு நிறம் – செவ்வாய் பகவன்

தோசை வெந்து வரும் போது அதன் மேற்பரப்பில் தோன்றும் சிவப்பு அல்லது தங்க நிறம் செவ்வாய் பகவானின் சக்தியை குறிக்கிறது என்று கூறப்படுகிறது.

### தோசையை சாப்பிடும் மனிதர்கள்

இந்த ஆன்மிக விளக்கத்தில் மனிதர்களுக்கும் ஒரு இடம் உள்ளது.

ஆண்களில் குரு பகவான்
பெண்களில் சுக்ர பகவான்

என்ற தத்துவம் அடங்கியிருக்கிறது என்று பழமையான சிந்தனைகள் கூறுகின்றன.

இதனால் ஒரு சாதாரண தோசை உணவில் கூட நவகிரகங்களின் சக்திகள் அனைத்தும் ஒன்றாக இணைந்திருப்பதாக கருதப்படுகிறது.

### தோசையின் வடிவம் – பிரபஞ்சத்தின் அடையாளம்

தோசையின் வட்ட வடிவு கூட ஒரு ஆன்மிக சின்னமாக கருதப்படுகிறது.

இந்த வட்ட வடிவு முழு பிரபஞ்சத்தை யும் குறிக்கிறது என்று தத்துவவாதிகள் விளக்குகின்றனர்.

தோசையை தோசைக்கல்லில் ஊற்றி சுற்றி பரப்பும் போது அது கடிகாரத்தின் சுற்று போல சுழலும். இது உலகம் தொடர்ந்து சுழன்று கொண்டிருக்கும் இயற்கை விதியை நினைவூட்டுகிறது.

### தெய்வங்களுக்கு தோசை நிவேதனம்

பழைய காலங்களில் விசேஷ நாட்களில் தோசையை தெய்வங்களுக்கு நிவேதனமாக



படைத்து வழிபடும் மரபு இருந்தது.

இது ஒரு சாதாரண உணவல்ல, பிரபஞ்ச சக்திகளை உள்ளடக்கிய புனித உணவு என்ற நம்பிக்கையால்தான் இந்த மரபு உருவானது.

இன்றும் சில புகழ்பெற்ற கோவில்களில் இந்த மரபு தொடர்கிறது.

## மதுரை கள்ளழகர் கோவில்

மதுரையில் உள்ள கள்ளழகர் பெருமாள் கோவிலில், பெருமாளுக்கு தோசையை நிவேதனமாக படைத்து பின்னர் அதை பிரசாதமாக பக்தர்களுக்கு வழங்கும் மரபு உள்ளது.

இந்த பிரசாதத்தை பக்தியுடன் பெற்றுக் கொண்டால் வீட்டில் சாந்தியும் வளமும் பெருகும் என்று பக்தர்கள் நம்புகின்றனர்.

## காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோவில்

காஞ்சிபுரத்தில் உள்ள வரதராஜ பெருமாள் கோவிலில், தோசை மாவில் மிளகு மற்றும் சீரகம் சேர்த்து தயாரித்து பெருமாளுக்கு நிவேதனம் செய்வார்கள்.

இந்த தோசை ஆரோக்கியத்தையும் ஆன்மிக சக்தியையும் தரும் பிரசாதமாக கருதப்படுகிறது.

## பாடலாத்ரி நரசிம்மர் கோவில்

செங்கல்பட்டு அருகே உள்ள பாடலாத்ரி நரசிம்மர் கோவிலில், பெருமாளுக்கு மிளகு தோசை செய்து பித்தளை பாத்திரங்களில் வைத்து நிவேதனம் செய்யும் வழக்கம் உள்ளது.

## சீரங்கம் ரங்கநாதர் கோவில்

உலகப் புகழ்பெற்ற சீரங்கம் ரங்கநாதர் கோவிலில்,

பச்சரிசி
கருப்பு உளுந்து
மிளகு
சீரகம்

சேர்த்து தோசை மாவு தயாரிக்கப்படுகிறது.

பின்னர் அந்த தோசை நெய்யில் வார்த்து பெருமாளுக்கு படைக்கப்படுகிறது.

இந்த பிரசாதத்தை அங்கு "சாம்பார் தோசை" என்று அழைப்பார்கள்.

## சாதாரண உணவிலும் மறைந்திருக்கும் ஆன்மிகம்

நாம் தினமும் சாப்பிடும் ஒரு சாதாரண தோசை கூட இவ்வளவு ஆழமான பிரபஞ்ச தத்துவங்களையும், ஆன்மிக அர்த்தங்களையும் கொண்டிருக்கிறது என்பதை நினைத்துப் பார்த்தால், நம் பாரம்பரியத்தின் ஆழம் எவ்வளவு பெரியது என்பதை உணர முடிகிறது.

அதனால் தான் நம் முன்னோர்கள் உணவை உண்பதற்கு முன் தெய்வத்தை நினைத்து நன்றி கூறும் பழக்கத்தை வைத்திருந்தார்கள்.



– எம் அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி,
திருச்சி – 620 015

Secret

# ஓவியன்

பாகம் 06

■ நிரஞ்சனா நெப்போலியன்

## கையாளும் பாணி

"அவரு ரொம்ப நல்ல மாதிரி,சார். கூட வேலை செய்றவங்க யாருக்கு எந்த உதவி வேணும்னாலும், முகத்துல வெறுப்பைக் காட்டாம செஞ்சி கொடுப்பாரு. ரொம்ப சின்சியரான ஆளு. நேர்மையானவரும் கூட. அப்படிப்பட்ட ஒரு ஆளை கவர்மெண்ட் ஆஃபீஸ்ல பார்க்கிறது ரொம்ப கஷ்டம், சார். அவங்க கல்யாண வாழ்க்கையைப் பத்தி சொல்லனும்னா, அவருக்குக் கல்யாணம் ஆகி பத்து வருஷம் ஆச்சு, சார். பொண்டாட்டினா அவருக்கு உயிரு. ரெண்டு பேருக்கும் நடுவுல ரொம்ப நல்ல பிணைப்பு இருந்தது, சார்.

அவங்களுக்குக் குழந்தை இல்ல. ஆனா, அவரு அவங்க மனைவி மேல வச்சிருந்த அன்பை அது எந்த விதத்திலும் குறைக்கல.

அவங்க இறந்ததுக்குப் பிறகு, மனுஷன் நொறுங்கி போயிட்டாரு, சார். சரியா வேலைக்குக் கூட வர்றதில்லை. அவர் இப்படியெல்லாம் இருந்ததே இல்ல, சார். அவங்க மனைவி உயிரோட இருந்த போது, அவர் ஆஃபீசுக்கு ஒரு நாள் கூட லீவு எடுத்ததே, இல்ல."

"உங்ககிட்ட அவர் ஃபோன் நம் பர் இருக்கா?"

"இருக்கு, சார். ஆனா இப்ப அவர் யார்





ஃபோன் பண்ணாலும் எடுக் கறதே இல்ல." என்றபடி அவரது கை பேசி எண்ணை ஒரு சீட்டில் எழுதி அவர்களிடம் கொடுத்தாள் சீதா.

"உங்க ஒத்துழைப்புக் ரொம்ப நன்றி, சீதா." என்ற ஓவியன், ஆதார் பிரிவை விட்டு வெளியே வந்தான்.

முருகன் தங்கள் ஜிப்பை நோக்கி நடக்க, தேர்தல் பிரிவை நோக்கி சென்றான் ஓவியன். அதைக் கண்ட முருகன், அவசரமாய் அவனைப் பின்தொடர்ந்தான். தேர்தல் பிரிவின் தலைமை அலுவலரான, தேர்தல் பிரிவின் வட்டாட்சியர் இப்ராஹிம், துணை வட்டாட்சியருக்கு அவர் செய்ய வேண்டிய வேலையைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தார். தன் அறையின் உள்ளே நுழைந்த ஓவியனைப் பார்த்து புருவம்உயர்த்தி னார். தன்னைத்தானே அறிமுகம் செய்து




கொண்ட ஓவியனுடன் கைகுலுக்கினார்இப்ரா ஹிம். சீதாவிடம் கேட்ட அதே கேள்விகளை இப்ராஹிமிடமும் கேட்டான் ஓவியன். சீதா விடமிருந்து பெற்ற அதே பதிலைத் தான் அவன் அங்கிருந்தும் பெற்றான். அவருக்கு நன்றி கூறிவிட்டு வெளியே வந்தான் ஓவியன்.

"சார், அகிலன் வேலை செய்றது ஆதார் டிபார்ட்மெண்ட்ல. அப்படி இருக்கும் போது, மத்த டிபார்ட்மெண்ட்ல அவரைப் பத்தி ஏன் விசாரிக்கணும்?" என்றான் முருகன் தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன்.

"அகிலன் ஒரு நேர்மையான ஊழியர்னு சீதா சொன்னாங்க. அவர் நேர்மையான ஆளா இருந்தா, அவரைப் பத்திநிச்சயமா எல்லா ஹை அஃபிஷியல்சுக்கும் தெரிஞ்சிருக்கும். அதேநேரம், ஒரே ஒருத்தருடைய வாக்குமூலத்தை வச்சு நம்ம எந்த முடிவுக்கும் வர முடியாது. ஏன்னா, அந்த ஒருத்தர், அவங்களுக்கு வேண்டாதவங்களாகவும் இருக்கலாம், வேண்டியவங்களாகவும் இருக்க லாம். வேலை செய்ற இடத்துல, எல்லாரும், எல்லாருக்கும் நல்லவங்களாகவும் இருக்க முடியாது, கெட்டவங்களாகவும் இருக்க முடியாது. அகிலனைச் சந்திச்சப் பிறகு, நம்ம மறுபடியும் கலெக்டர் ஆஃபீசுக்கு வர வேண்டி இருக்கும்..."

"பிரமாதம், சார்."

"எனக்குப் புகழுறது பிடிக்காதுனு நான் ஏற்கனவே சொன்னேன்." என்று எச்சரித்தான் ஓவியன்.

"ஐ அம் சாரி, சார்."

"நம்ம அகிலனைச்சந்திக் கணும். அவர் எங்க இருக்கா ருன்னு கேளுங்க."

"ஆனா, அவர் தான் ஃபோ னையே எடுக்கிறது இல்லைன்னு சீதா சொன்னாங்களே, சார்."

"நம்ம ட்ரை பண்ணி பார்ப் போம். எப்படி இருந்தாலும்,நம்ம அவங்க வீட்டுக்குப் போய்தானே ஆகணும்."

அகிலனின் கைபேசி எண் ணுக்கு முருகன் முயன்ற பொழுது, அவர்கள் எதிர்பார்த்த படியே அந்த அழைப்பை அவன் ஏற்கவில்லை. மறுபடியும் முயன்ற போதும் அவன் ஏற்கவில்லை. ஆனால் மூன்றாவது முறை அந்த அழைப்பை ஏற்றான் அகிலன். முருகன் அவனிடம் விஷயத்தைக் கூற, அவர்களைத் தன் வீட்டிற்கு வருமாறு அழைத்தான் அகிலன்.

அழைப்பைத் துண்டித்த முருகன்,

"இந்த ஆஃபீஸ்ல, ரெண்டு தடவைக்கு மேல அவருக்கு யாருமே ஃபோன் பண்ணி பார்த்த தில்ல போலருக்கு, சார்." என்று கிண்டலாய் கூறி சிரித்தான் முருகன்.

அது ஓவியனின் முகத்திலும் புன்னகையை வரவழைத்தது. அவர்கள் அகிலனின் இல்லம் நோக்கி விரைந்தார்கள்.

– தொடரும்...

தினமும் புதிய புதிய
இசை வீடியோக்கள்
ஆன்மிக பாடல்கள்
சுவையான சமையல்
வீடியோக்களை
வெளியிடும்

dheivamtv.com

இணையதளத்தை பார்க்கவும்

வாட்சப் மற்றும் தொலைபேசி எண்

7789941009

# மீம்ஸ் கலாட்டா


Husband : செல்லம், உனக்கு தீபாவளிக்கு சேலை எடுத்து தரவா.? இல்ல சுடிதார் எடுத்து தரவா.?
SHIN CHAN MEMES
single paiyan
wife : உங்களுக்கு எது துவைக்க ஈஸியா இருக்கோ, அதையே எடுத்து குடுங்க..😜😜


உங்க மனைவிக்கு எல்லா டெஸ்ட்டும் எடுத்து பாத்ததுல... கொழுப்பு தான் கொஞ்சம் ஜாஸ்தியா இருக்கு...!!
ஏன் டாக்டர்... இதுக்கா ஐயாயிரம் பீஸ்ஸு, அதை எங்கிட்ட கேட்டிருந்தா... நான் சொல்லியிருக்க மாட்டனா...!!??


Maria Roe Vincent, Flute Kamalakhar
டீச்சர்- உங்க அப்பாக்கு வயசு என்ன?
பையன்-ஆறு வயசாச்சு மிஸ்.
டீச்சர்-ஆறு வயசா..? என்னடா உளறுற..
பையன்-நான் பிறந்த பிறகுதானே அவரு அப்பா ஆனாரு..?😆😆😆😆😆


போக்குவாத்துக் கழகம்
சென்னை
வாங்கடா நமக்குன்னு தனியா பஸ் விட்டுருக்காங்களாம் ஒரு ரவுண்டு போய்ட்டு வந்துரலாம்




ஒரே தரமான நம்பர் 1 நாளிதழ்

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்



# தியாகத்தின் சம்பளம்

# அடிமைத்தனமே

ஜெயா பெட்டியில் Function செல்ல புடவை மற்ற பொருட்களை எடுத்து வைத்து கொண்டு இருக்கும் போதே வெங்கடேசன் அங்கு வந்து,

“மறக்காம பூரணி மாமியாருக்கு வாங்கின சீர் வரிசை எல்லாம் எடுத்துக்கோ”.

சரிங்க ... “ அத எடுத்துக்காம இருப்பேனா... உங்களோட தந்தை வழிவந்த கடைசி பணத்தில் வாங்கியதை எப்படி மறக்க முடியும்.....எல்லாம் வாங்கிட்டோமே “

ஜெயா வருத்தத்தோடு கூறினாள்.....

பாவம் வெங்கடேசன் இரண்டு தங்கை ஒரு தம்பிக்கு மூத்த அண்ணனாக பிறந்து சின்ன வயசிலேயே குடும்ப பொறுப்பில் தன்னை ஈடுபடுத்தி, பள்ளி இறுதி முடித்தவுடேனேயே, வேலை பார்த்து கொண்டே தபாலில் படித்து தம்பி தங்கைகளையும் படிக்கச் வைத்தவர்.

அதிலும் குருவும், பூரணியும் இரட்டையராக பிறந்து, தாயின் வலிமை குறைவுக்கு காரணமான வர்கள். பின்னர் அந்த இரட்டையரின் ஆறாவது வயதில் தாயை இழந்த நிலையில் அனைத்து பொறுப்பும் ஏற்று அவர்களின் பாசத்திற்கு அடி மையாகி போனார்.



தந்தை என்றைக்குமே அதிக சாமர்த் தியம் இல்லாமல் பழங்கதை பேசியபடி, வெட்டி மரி யாதை எதிர்பார்த்து, இருந்த கொஞ்ச நஞ்ச குடும்ப சொத்தை,

வீண் பெருமைக்கே வீணாக்கி, மனைவி காலத்திற்கு பிறகே தன்னை புரிந்தவர்.

அதன்பிறகு வெங்கடேசன் தனது பதினாலாவது வயதில் தந்தைக்கு, தம்பி தங்கைகளுக்கு தாயுமானவனாகினான். அவன் வாங்கி வந்த வரம்.

சில வருடங்களில் சற்று நிலையான வருமானம் வர துவங்கிய பின்னர் தாய் மாமன் தலைவீட்டால், மிச்சம் இருந்த சொத்தை விற்று கையளவு தோட்டத்தோடு இருந்த வீட்டை தன் பெயரில் மாற்றி கொண்டு 11 வயதில் இருந்த தங்கை லலிதாவையும், இரட்டையரான பூரணி.... குருவை வளர்ப்பதில் கவனம் செலுத்தினார் நம் கதாநாயகன் வெங்கடேசன்.

தான் தபாலில் படித்தாலும் தன் தங்கை லலிதாவை கல்லூரியில் சேர்த்து படிக்கச் வைத்து, அவளும் ஒரு வேலையில் அமர்ந்த பிறகு ஒரு இரண்டு வருடத்தில் கொஞ்சம் சேர்த்து வைத்து திருமணம் செய்ய நினைத்த நேரம், தந்தை காலம் முடிந்தது,

மீண்டும் கடன் சுமை....25 வயதிற்கு சற்று அதிகமாகவே சுமை தாங்கியானான். எப்படியோ சமாளித்து தங்கை படிப்பை முடித்தாயிற்று. இனி அவள் கொஞ்சம் உதவுவாள் என நினைத்த நேரத்தில் லலிதா

"அண்ணா நான் என்னோடே கல்லூரி பேராசிரியரை விரும்புகிறேன் என்றபடி வந்தாள் லலிதா"

"நீ இப்போதுதான் படிப்பு முடித்துள்ளாய் சிறிது காலம் வேலைக்கு போய் உலக அனுபவமும் பெற்று கொஞ்சம் சம்பாதித்தால் இன்னும் சிறப்பாக உனக்கு திருமணம் பண்ணலாம் "

"இல்லை அண்ணா நான் படிப்பு முடித்த பிறகுதான் உன்னிடம் சொல்லவேண்டும் என காத்திருந்தேன் இப்போ நீ திருமணம் செய்து வைக்கவில்லை என்றால் நான் தற்கொலை செய்து கொள்வேன் "

“என்ன லலிதா இப்படி எல்லாம் பேசுறே என்ற வெங்கடேசனிடம் ஆமாம் அவர் வீட்டில் உடனடியாக திருமணம் செய்ய வேண்டும் என்று கூறி விட்டார்கள் "

அவள் மாமியார் பங்கஜத்திற்கு எவ்வளவு சீர் செய்தாலும் குறை கூறி போனால் போகிறது என லலிதாவை மருமகளாக்கி கொண்டாள்.

வீட்டின் மேல் கடன் வாங்கி ஒரு வழியாக லலிதா கல்யாணத்தை முடித்தான்.




வெங்கடேசனின் தூரத்து சொந்தகார பாட்டி வந்து " வெங்கடேசா தாய் தந்தை அற்ற ஜெயா என்ற ஒரு உறவுக்கார பெண் இருக்கிறாள். சீர் சேனாதி செய்து திருமணம் செய்விக்க யாரும் இல்லை. ஆனால் அவள் மிக பொறுமைசாலி. தன்னுள் நிறைய திறமைகள் வளர்த்து வைத்திருக்கிறாள். சகலகலா வல்லி. படிப்பு பள்ளி இறுதிதான் என்றாலும் படு திறமைசாலி. அவளது கோலம் போடும் அழகு, சமையல் கலை, தையல், வீட்டை அலங்கரிக்கும் விதம், அனைத்தும் ஒரு அதீத அழகு, இன்று முழுதும் பார்க்கலாம். கண் கண்டதை கை செய்யும்."

இதை எல்லாம் இங்கே வந்து ஏன் பாட்டி சொல்றே"

"உனக்கும் அந்தந்த வயதில் திருமணம் நடக்க வேண்டாமா "

“பாட்டி நான் மீண்டும் வீட்டின் மேல் கடன் வாங்கி லலிதா கல்யாணம் செய்துள்ளேன். என்னால் எப்படி கல்யாணத்திற்கு செலவு செய்ய முடியும். இன்னும் குரு பூரணி படிப்பு வேறு உள்ளது. எனக்கு கல்யாணம் வேண்டாம் பாட்டி"

அட போடா எனக்கு உன் நிலைமை தெரியாதா அவள் உனக்கு சகலவிதத்திலும் உதவியாக இருப்பாள். ஜெயா வீட்டில் இருந்தபடியே தன்னால் முடிந்த வரை வருமானத்திற்கும் வழி செய்து தருவாள். தையல் மூலம் அவள் தன் திருமணத்திற்கு சிறிதளவு சேர்த்தும் வைத்துள்ள

அவளை வேண்டாம் என்று சொல்லாதே"

சரி பாட்டி உன் பிடிவாதத்தால் நான் திருமணத்திற்கு சம்மதிக்கிறேன் "

“நல்லது வெங்கடேசா உடனே கல்யாண வேலையை துவங்குகிறேன் என்றபடி பாட்டி கிளம்பினாள்.

இந்த கலைகள் அவளுக்கும் ஒரு சம்பாத்தியம் கொடுத்து உதவியது சிக்கனமும் சேர்ந்து வெங்கடேசனின் இல்லத்தை இனிது நடத்தி லலிதா கல்யாண கடன் அடைத்து வீட்டை மீட்டார்கள்....

அதற்குள் குருவும் பூரணியும் கல்லூரி படிப்பிற்கு தயார் ஆனார்கள். ஆயிற்று அடுத்த சுமை வெங்கடேஸிற்கு...என்றுமே பூரணி அழுது ஆர்பாட்டம் செய்து காரியத்தை சாதித்து கொள்வாள்.

குரு அடாவடியாக வார்த்தையால் காயப்படுத்தி காரியம் சாதிப்பவன்.

"குரு உன்னோடே மதிப்பெண் குறைந்துள்ளதால் நீ இன்ஜினியரிங் படிக்காமல் காலை கல்லூரியில் சேர்ந்து ஆர்ட்ஸ் அண்ட் சயின்ஸ் படிக்கிறாயா"

"என்ன சொல்றே அண்ணா மதிப்பெண் குறைந்தால் என்ன அரசு என்ஜினீரிங்கில்தான் ஸ்வீருவது கஷ்டம். தனியார் கல்லூரியில் சேர்த்து விடு... நீ வீட்டின் மேல் வாங்கியாந்து என்னை இன்ஜினியரிங் சேர்...நான் இன்ஜினியரிங் தான் படிப்பேன் " என்றான் குரு

"ஜெயா நமக்கு வேறு வழி இல்லை குருவையும் பூர்ணிமாவையும் படிக்கச் வைக்க நாம் வீட்டை அடமானம் வைக்கத்தான் வேண்டும் என்ற வெங்கேசனிடம்

கவலைபடாதீர்கள் எப்படியும் இந்த ஆண்டு பள்ளி கூட uniform தைக்க ஒரு ஆர்டர் எடுத்துள்ளேன். நம் பக்கத்து வீட்டு மகேஸ்வரி மற்றும் இருவரை வைத்து தைத்து கொடுத்து கடனை அடைத்து விடலாம். படிப்பென்கின்ற சொத்தை தர வேண்டியது நம் கடமைதானே "

"ஜெயா உனக்கென்று நான் ஒன்றுமே செய்து தர முடியவில்லை "என்று கண்கலங்கினான்.

வெங்கடேசன் "விடுங்கள் நமது ஸ்ரீராம் நீங்கள் தந்த பரிசுதானே"

"அதையும் இவர்களுக்காக காலம் தாழ்த்தி உன்னை காக்கவைத்து தானே தந்தேன்" என்று வருத்தத்தோடு கூறி விட்டு அடமானம் வைக்க



வங்கிக்கு சென்றான் வெங்கடேசன்

"அண்ணா நான் B.Sc முதல் வகுப்பில் பாஸ் செய்து விட்டேன் நமஸ்கரிக்கிறேன் உன்னையும் மன்னியையும்.என்றபடி வந்தாள் பூரணி

"சந்தோசம் நல்ல வேலை கிடைக்கணும் "

"அண்ணா நான் M.Sc படிக்க போகிறேன்" என்று குண்டை போட்டாள்

"பூரணி ஒரு வருடம் வேலைபார்த்து விட்டு பின் M.SC சேரு..இந்த ஆண்டு நம் ஸ்ரீராம் ஐந்தாம் வகுப்பில் இருந்து ஆறாம் வகுப்புக்கு ஸ்கூல் மாறனும் அதுக்கு பணம் கொஞ்சம் அதிகம் கட்ட வேண்டி இருக்கு" என்றான் வெங்கடேசன்

"அண்ணா ஐந்தாம் வகுப்பும் M.Sc யம் ஒன்றாகுமா" எனக்குநா நீ எதுவும் செய்ய மாட்டே... குரு மார்க் கம்மியா வாங்கினா கூட அவனுக்கு வீட வச்சு படிக்க வைப்பே " பூரணி அழ துவங்கினாள்

"பூரணி அழாதே நீ M.Sc பண்ணு, நான் சீட்டுக்கார அம்மாவிடம் சீட்டை எடுத்து எனது தையல் வருமானத்தின் மூலம் ஸ்ரீராம் படிப்பை பார்த்து கொள்கிறேன் " என்றாள் ஜெயா

"மன்னி உனக்கு இருக்கும் அக்கறை கூட அண்ணாக்கு இல்லை" என்றபடி தனது எண்ணத்தை சாதித்து கொண்ட பூரணி நகர்ந்தாள்



"இன்று என்ன உங்களுக்கு அவ்வளவு சந்தோசம் "என்றாள் ஜெயா

“குரு என்ஜினியரிங் படிப்பு முடித்து விட்டான். அவனும் வேலைக்கு சென்று பொறுப்பேற்று கொள்வான். இன்று அவனுக்கு ரிசல்ட் " அந்த சந்தோஷம்தான் எனக்கு "

"நீ யாரு என்னை வேலைக்கு போக சொல்ல... நான் மேல்படிப்பிற்கு அமெரிக்கா செல்ல வேண்டும். அதற்கு விண்ணப்பித்தாயிற்று. நீ என்ன செய்வதையோ எனது செய்வாயோ இன்னும் மூன்று மாதத்தில் நான் அங்கு இருக்க வேண்டும்" அணு கொண்ட போட்டபடி வந்தான் குரு.

வீடு மீண்டும் அடமானம் ஏறியது பூரணி கல்யாணம்.... மீண்டும் வீட்டு கடன்... குரு மேல் படிப்பு என சென்று அங்கேயே ஒரு பொண்ணை மணந்து கொண்டு செட்டில் ஆகிவிட்டான்.

காலங்கள் உருண்டது. வெங்கடேசன் வயது இப்போது 60.. உடலில் வலு இருந்தாலும் கம்பெனி ஓய்வு கொடுத்து விட்டது...

வெங்கடேசன் அவனது மனைவி ஜெயாவின் அடுப்படி சாமர்த்தியத்தால் தம்பி தங்கைகளுக்காக வீட்டை இரண்டு முறை அடமானம் வைத்தாலும் திருப்ப முடிந்தது.

லலிதா வீட்டின் முக்கிய விசேஷத்திற்கும்., இந்தியா வந்து வெகு நாளாகிவிட்டது என்றும் கூறிக்கொண்டு குரு அவன் மனைவி வந்து இருந்தனர். அவர்களை பார்க்கவென்று பூரணி வந்திருக்க வெகு வருடம் கழித்து அனைவரும் கூடினர். குரு இந்தியா வந்தது எல்லார்க்கும் சந்தோசம்.

எப்படியோ அனைத்தும் சமாளித்து, வெங்கடேசன் மகன் ஸ்ரீராம் என்ஜினீயரிங்கில் யூனிவர்சிட்டி ரேங்கில் தேர்ச்சி பெற்று இருந்தான்.

"அப்போது நாம் தம்பி தங்கைகளுக்காக வீட்டை அடமானம் வைத்து படிக்கச் வைத்தோம்... இப்போது ஸ்ரீராமின் மேல் படிப்பிற்காக வீட்டை வைக்கலாம்...ஆனால் அவர்கள் போல் இல்லாமல் நம் மகன் வீட்டிற்கான கடனை கட்டி திருப்பி விடுவான்'' என ஜெயாவோடு பேசிக்கொண்டு இருந்தான் வெங்கடேசன்

அப்போது வீட்டிற்குள் நுழைந்த குருவும் பூரணியும் மிக பெரிய பூகம்பம் கிளப்பினர்.

அதெப்படி அண்ணா " லலிதாவிற்கு இரண்டும் பெண், குருவிற்கு ஒரு பிள்ளை எனக்கு ஒரு பெண் அன்று இருக்கும்போது அப்பாவின் வீட்டை எப்படி உன் மகனுக்காக மட்டும் அடமானம் வைப்பாய் " என்று பூகம்பத்தை கிளம்பினாள்

"எங்களுக்கு படிப்பு, கல்யாணம்னு வீடு வைத்தாய்...அது ஒகே... அது எப்படி உன் மகன் படிப்புக்கு நீ அடமானம் வைக்கலாம்... அப்போ எங்கள் பிள்ளைகளுக்கு... என்ன செய்வ'" என கேட்டு பொங்கி எழுந்தான் குரு

..." ஒன்னு செய் நீ வீட்டைவித்து 2ம் தலைமுறையின் எல்லா பிள்ளை களின் பேரில் அந்த பணத்தை போடு... என்று லலிதா நியாயம் பேசினாள்

வெங்கடேசன் "எல்லா முறையும் நான் கடன் வாங்கியது எனக்கல்ல உங்களுக்கு ஆனால் நான்தானே கடன் அடைத்தேன் அது போல்




இந்த முறையும் ஸ்ரீராம் மேல் படிப்பு முடிந்தவுடன் நான் வீட்டை திருப்புகிறேன்... அப்போது நாம் விற்கலாம், தற்போது உங்கள் குழந்தைகள் சின்னவர்கள்தானே "

லலிதா, குரு.,, பூரணியின் நிஜமுகம் தெரிந்தது...

"நீ இத்தனை வருடம் இந்த வீட்டில் குடியிருந்தாய், உன் கடமையை செய்தாய்.... அப்பா வீடு வைக்கவில்லை என்றால் நீ செய்வாயா"

வெங்கடேசனின் தியாகத்திற்கு சுயநலம் என்று வஞ்ச பரிசு அளித்தார்கள்... முடிவில் அவர்களே வென்றார்கள்...

பாவம் ஸ்ரீராம் மேல் படிப்பு எண்ணத்தில் கேம்பஸ் interview கூட அப்ளை செய்யாததால் ஸ்ரீராமின் எதிர் காலம் கேள்வி குறியாயிற்று!!

இவை அனைத்திற்கும் காரணம் வெங்கடேசனின் பாச அடிமைத்தனம் தான்.

ஒரு வழியாக வீட்டை விற்று வாங்கியவரிடம் மூன்று மாதம் டைம் கேட்டு இருந்தார் வெங்கடேசன். அடுத்த வாரம் வீட்டை ஒப்படைக்க வேண்டும்... ஸ்ரீராம் வேலைக்காக ஒரு interview விற்கு பெங்களூரு சென்றிருந்தான்....

அதற்குள் கடைசி செலவாக பூரணியின் மாமியார் மாமனார் அறுபதாம் கல்யாணமும், மகள் மஞ்சள் நீராட்டு விழாவும் சேர்ந்துவந்ததால் வெங்கடேசன் வழக்கம் போல் சீர் கொண்டு செல்வதற்காக ரெடி ஆகி கொண்டு இருக்கும்




போது தான் வெங்கடேசன். “தன் மனைவிடம்.. என்ன ஜெயா மணி ஆறது நீ போய் தானே கோலம் போடணும்...சீக்கரம்” என கூறினார்...

“ஓலா வண்டி இன்னும் 4 நிமிஷத்தில் வந்துடும்...கிளம்பு..”. என்று கூறி கொண்டு இருந்த போது வாசலில் கார் நிற்கும் சத்தம் கேட்டது...

வாங்கோ வாங்கோ சார்...” என்றார் வெங்கடேசன்

“உங்களை பார்த்து ரெண்டு மாதம் ஆகிவிட்டது வேலை ஒய்வு பெற்றபின்னர் நீங்கள் வரவில்லை அதனால் நான் வந்தேன்” என கூறி கொண்டு வெங்கடேசனின் மேலதிகாரி பரந்தாமன் வந்து நின்றார்...

அவர் மகள் மித்ரா ஸ்ரீராமோடு ஒரே கல்லோரியில் படித்தவர்... ஸ்ரீராமை பற்றி அனைத்தும் அறிந்த அவர்கள் கூறிய செய்தி ஜெயாவிற்கும் வெங்கடேசனிற்கும் ஆனந்த கண்ணீர் வரவழைத்தது.

ஸ்ரீராம் எந்த காலேஜில் மேல் படிப்பிற்கு அப்ளை செய்திருந்தானோ அங்கு படிப்புக்கான கட்டணம் செலுத்திய விவரத்தோடு ஒரு கூடுதல் போனசாக.. நகரின் மிக பெரிய கல்யாண மண்டபத்தில் Care Taker.... வேலையும் அங்கு ஒரு 3BHK யில் தங்குமிடமும் கூடிய வேலைக்கான உத்தரவு கடிதத்தையும் தந்தனர்.

வெங்கடேசனின் தியாகம் கூட ஒரு அடிமைத்தனமே. அதன் சம்பளம் சொத்துக்களை இழந்து சுயநலக்காரர்களை ஜெயிக்க செய்தது.

வெங்கடேசனின் தியாகத்திற்கு சக தோழர் பரந்தமான் மூலம் ஒரு நியாயம் கிடைத்தது....

குடும்பத்திற்காக தியாகம் செய்வது தவறில்லை ஆனால் அது சுயநலக்காரர்களுக்கான வெற்றிப்பாதை ஆகிவிட கூடாது. ஒரு வழி பாதையாக இருந்தால் நாம் முழித்து கொள்ள வேண்டும்.

– செல்லம் சேகர்


www.panmugam.com

பன்முகம் .காம்

ஆசிரியர், வெளியீட்டாளர்
மகாலட்சுமி
MahaLakshmi
Cell: 9337501889

முதன்மை செய்தியாளர்
Rakesh, C.N.Rajan

துணை ஆசிரியர்கள்
Tina, Arulmozhi, Thenuka

வடிவமைப்பு
SML GRAPHICS Ph:9444228203

Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar
Chennai 600081

தொடர்பு கொள்ளவும்
7789941009



இதழ்குறித்த தன்னிலை விளக்கம்

இந்த இதழ் முழுவதும் இணையதளத்தையும், வலைதளங்களையும் சார்ந்தே திரட்டப்படும் செய்திகளை ஒழுங்குப்படுத்தி தரப்படும் தன்னிகரில்லா இதழாகும், இந்த தளத்தில் வெளிவரும் செய்திகள், விளம்பரங்கள் புகைப்படங்கள் அனைத்தையும் எந்தவித லாபநோக்கமின்றி தொகுக்கப்பட்டு நேர்த்தியாக ஒழுங்குபடுத்தி வாசகர்களின் பார்வைக்கு கொடுக்கும் சிறப்பான ஒரு சேவையை செய்துவருகிறோம். இந்த இதழில் வரும் அனைத்து செய்தி, விளம்பரம், புகைப்படத்திற்கு எந்தகாரணம் கொண்டும் எவ்விதத் தனிநபரும் பொறுப்பாகமாட்டார்கள், மற்றபடி இணையதள சட்டவரன்முறைக்கு ஏற்ப இந்த இதழ் தயாரிக்கப்படுகிறது சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு சட்ட வரன்முறையின் வழி பிசகாமல், மற்றவரை இகழ்வது, தாழ்த்துவது, சமுதாயத்தை சீரழிக்கும் செய்திகளை வெளியிடுவது கிடையாது. சேவை மட்டுமே நமது நோக்கம்.


அட்டையில்: மலையாள நாயகி
மாளவிகா மோகனன்



# இன்மை

நீள்நெடிய கனவொன்றை தணலாக்கியபின்தான்
மீந்துகிடக்கிறது உன் பேரொளி..

சிறகுகள் வற்றிய கடலலை ஒன்றில்
ஒட்டிக்கொண்டிருக்கின்றன
என்மேலான உன் பிரியங்கள்
எப்போதும் இலைமறை காயாய்..

தவிர்க்கவியலா சந்தர்பங்கள் சிலவற்றில்கூட
புதையுண்டு மறைந்துகொள்கிறது
எதிர்ப்படல் இம்சையாய்
உன் காட்சிமையும் மீட்சிமையும்..

நீ விட்டெறிந்த சில பட்டங்கள்
என் இலக்குகளை மறுதலிக்கின்றன..

தவிர்க்கவே முடியாத சில
பிரிவின் ரணங்கள் குறித்து
உன்னிடமேதும் விளக்கங்களில்லை
அல்லது அவற்றை விருப்பமில்லை..

இருகூறாய் பிளந்துவிட்டால்தான் என்ன
நீ அருகற்ற ரணங்களை
சாம்பல் செய்தால் என்ன..

வெட்டுப்பட்டுவிட்ட ஆட்டுக்குட்டிகளுக்கு
தெரிவிக்கவேண்டிய
அவசியங்கள் இல்லாதிருந்தது
நேர்ந்துகொண்ட சாமி எதுவென்று..

சில பலிபீடங்களில்
என் ஆன்மா துடித்துக்கொண்டிருக்கிறது
உன் இன்மைக்கு நன்றி..!

–ம.முத்துக்குமார்
வே.காளியாபுரம்




# இனிப்பகம்

அந்தப் புகழ்பெற்ற இனிப்பகத்தின் பெயர் 'மதுரம் ஸ்வீட்ஸ்'. கடந்த முப்பது ஆண்டுகளாக அந்த ஊரின் விசேஷங்களுக்கு அங்கிருந்துதான் இனிப்புகள் செல்லும். ஆனால், சமீபத்தில் எதிரே திறக்கப்பட்ட ஒரு நவீனக் கடையில் "கேரமல் மற்றும் சாக்லேட்" கலந்த புதுமையான இனிப்புகள் வந்ததால், மதுரம் ஸ்வீட்ஸின் கல்லா பெட்டி நிறையவில்லை.



முதலாளி மாணிக்கம் தன் சமையல் கலைஞர்களை அழைத்தார். "நமது பாரம்பரியம் மாறக்கூடாது, ஆனால் சுவை நவீனமாக இருக்க வேண்டும். அடுத்த வாரம் தீபாவளிக்கு யார் ஒரு 'ஸ்பெஷல்' இனிப்பைத் தயார் செய்கிறீர்களோ, அவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசும், தலைமைச் சமையல் கலைஞர் பதவியும் தருவேன்," என்றார்.

அங்கு வேலன் என்பவர் மிகவும் கைராசிக்காரர். அவர் எதைச் செய்தாலும் ருசி அள்ளும். அவருக்குப் போட்டியாக செல்வம் இருந்தார். செல்வத்திற்கு வேலன் மீது தீராத பொறாமை. வேலன் ஒரு புதிய வகை 'பாதாம் அல்வா' தயாரிக்கத் திட்டமிட்டார். அதில் குங்குமப்பூவும், ஏலக்காயும் சரியான விகிதத்தில் கலந்து, ஒரு ரகசியக்




கலவையைச் சேர்த்து ஊறவைத்தார்.

போட்டிக்கு முதல் நாள் இரவு. வேலன் தன் கலவையை ஒரு ஜாடியில் மூடி வைத்துவிட்டுச் சென்றார். இதைப் பார்த்த செல்வம், "இவன் ஜெயித்துவிடக் கூடாது" என்று எண்ணி, சமையலறையில் இருந்த வேப்ப எண்ணெய் பாட்டிலை எடுத்தார். வேலன் தயாரித்து வைத்திருந்த அந்த பாதாம் கலவையில் ஒரு பெரிய கரண்டி வேப்ப எண்ணெயை ஊற்றி நன்றாகக் கலக்கிவிட்டு, ஒன்றும் தெரியாதது போல் நழுவினார். "நாளைக்கு முதலாளி இதைச் சாப்பிடும்போது கசப்பில் துப்பிவிடுவார், வேலன் வேலைக்கே வேட்டு வைக்கப்படும்" எனச் சிரித்துக் கொண்டார்.

மறுநாள் போட்டி தொடங்கியது. வேலன் அந்தப் பாதாம் கலவையை எடுத்து நெய்யில் வதக்கி அல்வாவாக மாற்றினார். அவருக்கு ஒரு விசித்திரமான மணம் வந்தது, ஆனால் நேரம் இல்லாததால் அப்படியே கிண்டினார்.

முதலாளி மாணிக்கம் வந்து ஒவ்வொரு




இனிப்பாகச் சுவைத்தார். கடைசியாக வேலனின் அல்வாவை ஒருஸ்பூன் எடுத்து வாயில்வைத்தார். சில நொடிகள் அமைதியாக இருந்தார். செல்வம் உள்ளுக்குள் குதித்துக் கொண்டிருந்தார்.

திடீரென முதலாளி, "அற்புதம்! வேலன், நீ ஒரு மேதை!" என்றார். செல்வம் அதிர்ந்து போனார்.

முதலாளி தொடர்ந்தார், "இப்போதெல்லாம் எல்லோரும் அளவுக்கு அதிகமான இனிப்பை விரும்புவதில்லை. நீ இந்த அல்வாவில் சேர்த்திருக்கும் அந்த 'லேசான கசப்புத் தன்மை' (Bitter-Sweet) அந்தத் திகட்டும் இனிப்பைச் சமன் செய்து, ஒரு மூலிகை மணத்தைத் தருகிறது. இது ஒரு ஆரோக்கியமான இனிப்பு! நீயே வெற்றியாளன்."

செல்வம் அப்படியே இடிந்து போய் நின்றார். வேலனை அவமானப்படுத்த அவர் ஊற்றிய வேப்ப எண்ணெய், அந்த இனிப்புக்கு ஒரு 'யூனிக்' (Unique) சுவையைத் தந்து வேலனுக்குப் பரிசை வாங்கிக் கொடுத்துவிட்டது

– லால்குடி வெ நாராயணன்

# ஒற்றைப் பனமரம்




ஒத்தப் பனமரம் இந்த வார்த்தையைக் கேட்டாலே அப்படியே ஒடம்பு நடங்குதே ஒங்களால் உணரமுடியுதா,,,? நீடூருக்கும் செம்பியன்மாதேவிக்கும் இடையிலே வீடுகள் இல்லாத மெயின் ரோட்லதான் அந்த வாய்க்கால் இருக்கு அந்த வாய்க்காலின் கரையிலதான் அந்த ஒத்தப் பனமரம் இருக்கு அந்தப்பக்கம் யாரும் தனியா போறதே இல்ல அந்த பனமரத்துல ஒரு பேயி குடியிருக்குன்னு சொல்வாங்க கன்னிபொண்ணுகளோ,இளவட்டப் பசங்களோ போனா அவங்க மேல வந்து ஒக்கந்துட்டு சேட்டை பன்னுமாம் அந்த பனமரத்துல காய் காய்ச்சாலும் பழம் பழுத்தாலும் யாரும் பறிக்கிறது இல்ல,அதுவா பழுத்து விழுந்தாலும் எடுக்க மாட்டாங்க பேயி புடிச்சிடுமாம்,

நீடூர், தண்ணிலாப்பாடி, பாலக்குறிச்சி, மரைக்கார்கட்டளை, இந்த ஊருல உள்ளவங்க எல்லாரும் செம்பியன்மாதேவிக்குதான் கடைக்கு சாமான் வாங்க வரணும் அதுவும் காலையிலோ அல்லது சாயங்காலமோதான் வருவாங்க உச்சிவெயில் நேரத்துல வந்தா பேயி உக்கிரம் தாங்காம நம்ம புடிச்சி ஆட்டு ஆட்டுன்னு ஆட்டிடுமாம் மத்தியானம் நேரத்தில அந்த ரோட்ல ஒரு ஈ,காக்காக்கூட பறக்காது அமைதியா இருக்கும்

சிலப்பேரு சாயங்காலம் கடைக்கு போறவங்க வருவதுக்கு லேட்டாச்சுன்னா யாராவது தொணைக்கு வரும்வரை காத்திருந்துதான் வருவாங்க,,, அப்படியே யாரும் வரலன்னா பொறுத்து பொறுத்து பாத்துட்டு தனியேதான் வந்தாகணும் அப்படியே தனியே வரும்போது அந்த ஒத்தப் பனமரத்துக்கு பக்கத்தில வரும் அவனவன் ஒளரிக்கிட்டு தனக்குப்புடிச்ச தெய்வங்களை வேண்டிக்கிட்டு ஒரக்க பாட்டு பாடிக்கிட்டே வருவானுங்க அந்த குரலில் ஒரு நடுக்கம் கலந்து வரும் பாட்டே



புடிக்காதவர்கள்கூட சும்மா பக்தி பாடல் வரிகளை சவுண்டா பாடிக்கிட்டே வருவார்கள்

ஒரு நாள் அப்படிதான் காத்தமுத்து வரும் போது மருதமலை மாமுனியே முருகையா பாட்ட சவுண்டா பாடிக்கிட்டே ஓடிவந்திருக்கான் ஓடிவரும்போது ரோட்ல உள்ள கல்லுத் தடுக்கி விழுந்திட்டான்.

விழுந்தவன் பேயிதான் தள்ளிவிட்டிச்சின்னு நெனச்சிக்கிட்டு வாங்கிட்டு வந்த சாமானை யெல்லாம் அப்படியே போட்டுட்டு உயிர் பொழச்சாப் போதுமுன்னு தலத்தெறிக்க ஓடிவந்து படுத்தவன்தான் ஒரு மாசம் பூசாரி வீட்டுக்கு அலஞ்சி முடிக்கயிறு கட்டினாங்க,பள்ளிவாசலில் போயி தாயித்து மந்திரிச்சி போட்டாங்க அப்புறம்தான் சரியாச்சி,,, அவனுக்கு சரியானதும் ஊர்ல உள்ளவங்க எல்லாரும் என்னாச்சுடான்னு கேக்கும்போது அவன் சொன்னான்

"அந்த ஒத்தப் பனமரத்துக்கிட்ட வரும்போது யாரோ என்ன தள்ளிவிட்டாங்க நான் விழுந்துட்டேன் பயத்துல முருகா,,,முருகான்னு கத்தினேன் அப்போ வெள்ளையா ஒரு உருவம் சிரிச்சிட்டேப் போயி அந்த பனமரத்தில ஏறிட்டு அப்பன் முருகன்தான் என்ன காப்பாத்தினான்"

இப்படிதான் ஒத்தப் பனமரத்தின் கதைகள் கலங்கடித்துக்கொண்டே இருந்தது ஓங்கி வளர்ந்த அந்த ஒத்தப் பனமரத்துக்கு எத்தன வயசுன்னு யாருக்கும் தெரியாது யாரக் கேட்டாலும் ரொம்ப வருசமா இருக்கு அது பலப்பேர பயமுறுத்தினாலும் யாரும் அதை வெட்டமாட்டாங்க,,, வெட்டினா அவன் குடும்பமே காலியாகிடும் ஒரு நாளு அப்படிதான் வெறகு பொறுக்க வந்த வேலம்மா அந்த பனமரத்துல ஒரு காஞ்சிப்போன மட்ட விழுந்துக் கெடந்தத எடுத்துக்கிட்டு போயிருக்கு அடுப்பு பத்த வைக்கலாமுன்னு வீடு போயி சேருவதற்கு முன்னாடியே அந்த மட்டக்குள்ள ஒரு தேளு




இருந்து கொட்டிட்டுப்போல அந்த அம்மா பொணமாச்சி எல்லாரும் இது பேயோட வேலதான்னு பேசுக்கிட்டாங்க இப்படி பல சரித்திர சாதனைகள் அந்த ஒத்தப் பனமரத்திக்கு உண்டு அந்த சாதனை திலகம் ஒத்தப் பனமரத்துக்கும் சோதனை வந்தது புயல் வடிவத்துல

ஒரு காத்திய மாசம் சோன்னு பெரும் மழையும் புயலும் கரையைக் கடக்காமல் மூனு நாள் தொடர்ந்து அடிச்சிக்கே இருந்தது,,, ஊர்ல உள்ள குடிசை வீடுகளெல்லாம் இடிஞ் சிபோய் மக்களுக்கு குந்தியிருக்க எடமில்லாமல் பக்கத்திலுள்ள பெரிய கோவிலுல போய் தங்கி இருந்தாங்க மூனு நாள் கழிச்சி வெள்ளம் வடிஞ்சி ஓரளவுக்கு நார்மலுக்கு வந்ததும் எல்லாரும் பசி பட்டினியோட ஊர் பக்கம் வந்தாங்க...

வரும்போதுதான் அந்தக் காட்சியைக் கண்டு எல்லாரும் அதிர்ச்சியானாங்க,,, ஆமா நீங்க நினைப்பதுதான் அந்த ஒத்தப் பனமரம் புயலுக்கு இரையாகி விழுந்துக் கெடந்தது எல்லாரும் அதிசயமாய் ஓடிப்போய் ரவுண்ட் கட்டி பார்த்தாங்க.

அதுல ரெண்டு மூனு பசங்க பசி தாங்காமல் பனமரத்திலுள்ள காய்களை புடுங்கி வெட்டி சாப்பிடானுங்க. மூனு நாள் பட்டினி கொடுமை என்ன செய்வானுங்க,,, அப்போ அந்தக் கூட்டத்தில் வேடிக்கைப் பார்த்த ஒரு பெரிசு சொன்னாரு

"ஏலேய் எளம் ரெத்தம் பயமறியாதுங்கறது உண்மதான்டா,,, அது பொல்லாத பேயி அதோட காயை நீங்க திங்கிறீங்க என்ன ஆகப்போகுதோ"

"அடா போ பெரிசு அவன் அவனுக்கு பேய் பசி பசிக்குது பசி வந்தால் பத்தும் பறந்திடுமுன்னு சொல்வாங்க தெரியாதா இதுல பேயாவது பூத மாவது ஒனக்கு வேண்டாமுன்னா நீ போ நாங்க திங்கிறோம்"

"துடுக்கா பேசாதீங்கடா அது பயங்கரமான பேயி ஒங்கள சும்மாவிடாது பாரு"

"பயங்கரமான பேயிதானே பனமரம் சாயும் போது தாங்கிப் புடிச்சி இருக்காலாமே எங்க பயந்துப்போயி ஒடிச்சி"

பனமரம் விழுந்து பத்து வருசமாச்சி அந்த பனமரத்துல காயைப் புடிங்கி தின்னப் பசங்க ளுக்கு ஒன்னும் ஆகல நல்லாதான் இருக் கானுங்க அவனுங்களை திங்க வேண்டாமுன்னு பயமுறுத்திய பெரிசுதான் இப்போ உயிரோடு இல்ல, ஆனாலும் அந்த விழுந்த பனமரத்த இன் னும் யாரும் அப்புறப்படுத்தல.

கொஞ்சம் கொஞ்சமா இத்துப்போய்க்கிட்டு இருக்கு,,, செத்தும் கொடுத்தான் சீதக்காதின்னு சொல்லுவாங்க அப்படிதான் இத்துப்போனாலும் இன்னும் பயமுறுத்திக்கிட்டே இருக்கு அந்த ஒத்தப் பனமரம்.

~ நாகை ஆசைத்தம்பி

# மீம்ஸ் கலாட்டா







நேத்து ராத்திரி நாலு பேர் என் வீட்டுக்கு திருட வந்தாங்க, வீடு புல்லா தேடியும் ஒன்னும் கிடைக்கல.

தூங்கிட்டு இருந்த என்னை எழுப்பி "ஒழுங்கா வேலைக்கு போயி நாலு காசு சம்பாதிச்சு சேத்து வெய்ன்னு" மொத்து மொத்துன்னு மொத்திட்டு போய்ட்டாங்க. 😭😭😭😭






# மாவிலைத் தோரணம் எதற்கு கட்டுகிறோம் தெரியுமா?

பொதுவாக விழாக்காலங்கள், கொண்டாட்டத் தருணங்களில் வீட்டின் வாயிலில் தோரணமாகவும் பூசைகளின்போதும் பயன்படுத்தப்படுகிறது. இதுபோல், மாவிலை பயன்படுத்தப்படுவதற்கான காரணம் என்னவென தெரிந்து கொள்வோம்.

மாவிலைத் தோரணம் கட்டுவது எதற்காக?

பொதுவாக விழாக்காலங்கள், கொண்டாட்டத் தருணங்களில் வீட்டின் வாயிலில் தோரணமாகவும் பூசைகளின்போதும் பயன்படுத்தப்படுகிறது. இதுபோல், மாவிலை பயன்படுத்தப்படுவதற்கான காரணம் என்னவென தெரிந்துகொள்வோம்.


வீட்டில் உள்ளவர்கள் உடல் ஆரோக்கியம் பெறவேண்டும் என்பதற்காக இதுபோன்ற பழக் கங்களை பின்பற்றச் செய்துள்ளனர் நமது முன் னோர்கள்.

நூலை மஞ்சளில் தோய்த்து எடுத்து,மாவிலை களை ஒரே அளவு உள்ளதாக எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு அதனை சுத்தம் செய்து துடைத்து, அதில் மஞ்சள் தடவி குங்கு மம் வைத்து நன்கு காயவைத்து கட்ட வேண்டும். இதனுடன் வேப்பி லைகளையும் சேர்த்து கட்ட வேண்டும்.

பொதுவாக விழாக்காலங்கள், கொண்டாட்டத் தருணங்களில் வீட்டின் வாயிலில்தோரணமாக வும் பூசைகளின்போதும் பயன்படுத்தப்படுகிறது.

வீட்டில் உள்ளவர்கள் உடல் ஆரோக்கியம் பெறவேண்டும் என்பதற்காக இதுபோன்ற பழக் கங்களை பின்பற்றச் செய்துள்ளனர் நமது முன் னோர்கள்.

நூலை மஞ்சளில் தோய்த்து எடுத்து,மாவிலை களை ஒரே அளவு உள்ளதாக எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு அதனை சுத்தம் செய்து துடைத்து, அதில் மஞ்சள் தடவி குங்குமம்



வைத்து நன்கு காயவைத்து கட்டவேண்டும். இதனுடன் வேப்பிலைகளையும் சேர்த்து கட்ட வேண்டும்.

மாவிலைகளுக்கு ஒரு சிறப்புத் தன்மை உண்டு. அவை மரத்தில் இருந்து பறித்தபிறகும் கரியமில வாயுவை எடுத்துக்கொண்டு பிராண வாயுவை வெளிவிடும் தன்மை கொண்டவை.

பொதுவாக வீட்டு விசேஷங்கள் என்றாலும் கோவில்கள் என்றாலும் அங்கு மக்கள் அதிகம் கூடுவதுண்டு. இதனால் அங்கு சூழ்ந்திருக்கும் நல்ல காற்றானது அதிக மக்கள் விடும் மூச்சுக் காற்றால் அசுத்தமாகி மாசுபடும். இப்படி சூழும் அசுத்தக்காற்றை தூய காற்றாக மாற்ற உதவுகிறது மாவிலைகள்.

விழாக்களில் கலந்துகொள்ளும் குழந்தைகள், முதியவர்களுக்கு சுவாசம் தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. அப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தடுக்க இயற்கை அளித்த வரப்பிரசாதம் தான் 'மாவிலை' தோரணம்.

மாவிலைக்கு நோய் பரப்பும்அணுக்களை அழிக்கும் ஆற்றல் உண்டு என அறிந்ததால்தான் அதைப் பின்பற்றக் கற்றுத் தந்துள்ளனர் நமது முன்னோர்கள். ஆனால், தற்போது அதற்குப் பதிலாக மாவிலை வடிவில் விற்கும் நெகிழித் தோரணங்கள் கட்டுவதால் சுற்றுச்சூழல் மாசுக்கு வழிவகுக்கிறது.



கலசம் வைத்து வழிபாடு செய்தபின் மாவிலை மூலம் கலச நீரை தெளிப்பது, கலச நீரை அருந்துவது போன்றவற்றால் ஆரோக்கியம் மேம்படும். மாவிலை போடப்பட்ட கலச நீரில் பிராண வாயுவின் அளவு அதிகமாக இருக்கும்.

அதேபோல் வீட்டு வாசலில் மாவிலைத் தோரணம் கட்டுவதால் எதிர்மறை சக்திகள் வீட்டில் நுழைவதைத் தடுக்க முடியும்.

மாவிலை தோரணம் வீட்டில் இருக்கும் காற்றினை சுத்தம் செய்வதால் உடல் ஆரோக்கியம் மேம்படும். விழாக்களின்போது மாவிலை தோரணம் கட்டுவதால், விழாவுக்கு வரும் பக்தர்களின் எதிர்மறை எண்ணங்களை நீக்கி புத்துணர்ச்சி தரக்கூடியதாக இருக்கும். இதற்கு 11 அல்லது 21, 101, 1001 மாவிலைகளை தோரணமாக கட்டுவது நல்லது. காய்ந்த மாவிலையாக இருந்தாலும் அதன் சக்தி குறையாது.

–ப.கோபிபச்சமுத்து,
புதுப்பேட்டை,




# இயற்கை ஆசிரியர்

கண்ணூத்து மலைக் கிராமம்.

அங்கே ஒரேயொரு அரசு பள்ளி.

அதில் கற்றலும் இருக்காது. கற்பித்தலும் இருக்காது.

அக்கிராமக் குழந்தைகள் பள்ளிக்குப் போக மாட்டார்கள். அதற்குப் பதிலாய், ஊரின் ஓரத்தில் இருக்கும் முருகன் தாத்தாவின் பழைய குடிசைக்குப் போவார்கள்.

அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது.

கையெழுத்து கூடப் போடத் தெரியாது.

ஆனால், "மழை எப்ப வரும்"

"செடி எத்தனை நாளில் எத்தனை உயரம் வளரும்?"

“இந்த பாதையில் போக வேண்டாம்... மாற் றுப் பாதையில் போகவும்" என்று சொல்லுவார். அவர் சொன்னது எதுவுமே தவறியதில்லை.



ஒரு நாள், பள்ளிக்குப் புதிய ஆசிரியர் வந்தார். பள்ளியை பார்த்தார்.

குழந்தைகள் இல்லை.

“எங்கே போயிருக்காங்க?” என்று கேட்டுக் கொண்டு, நேரே அந்தக் குடிசைக்குப் போனார்.

அங்கே, குழந்தைகள் சுற்றி அமர்ந்திருக்க, முருகன் தாத்தா நடுவில் அமர்ந்திருந்தார்.

“இவர் தான் எங்க ஆசிரியர்” என்றார்கள் குழந்தைகள் முருகன் தாத்தாவைக் காட்டி.

புது ஆசிரியர் சிரித்தார். அது கேலிச் சிரிப்பு. "படிக்கத் தெரியாதவர் எப்படி ஆசிரியர் ஆக



முடியும்?" கேட்டார்.

அடுத்த நாள் முதல், எல்லாக் குழந்தைகளும் பள்ளிக்குக் கொண்டு செல்லப் பட்டார்கள்.

புத்தகங்கள் திறக்கப்பட்டது. பாடங்கள் ஆரம்பமானது. ஆனால், கண்கள் கரும் பலகையில் இருந்தாலும் குழந்தைகளின் மனசு மலைக்குள்ளேயே இருந்தது.

ஒரு வாரம் கழித்து மழை மேகம் சூழ்ந்த நாளில், பள்ளி முடிந்து குழந்தைகள் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். அது ஒரு குறுக்கு வழி. அந்த வழியில் தண்ணீர் ஓட ஆரம்பித்தது.

அது சாதாரண ஓடை இல்லை

மலைச்சரிவு வரும் முன் வரும் சின்னதாய் அறிகுறி காட்டும் ஓடை. அது முருகன் தாத் தாவுக்கு மட்டும்தான் தெரியும்.

எங்கிருந்தோ அவர் வந்தார். "அதுல போகா தீங்க! எல்லாரும் மேலே ஓடுங்க!" கத்தினார்.

குழந்தைகள் ஓடினார்கள்.

சில நிமிடங்களில்,மண், கல், மரம் எல்லாம் சரிந்தன.அந்தப் பாதை முழுவதும் புதைந்தது.

அடுத்த நாள் புதிய ஆசிரியர், தாத்தாவை அதிசயமாய்ப் பார்த்தார்.

"நீங்கள் எப்படித் தெரிஞ்சுக்கிட்டீங்க?" கேட்டார்.

முருகன் தாத்தா சிரித்தார். "மலை பேசும் அதைக் கேட்கத் தெரிஞ்சா போதும்" என்றார்.

ஆசிரியர், குழந்தைகளிடம் சொன்னார்,'நான் உங்களுக்கு புத்தகத்தில இருக்கிறதை கற்பிக் கிறேன் ஆனா இயற்கையோடு இசைந்து வாழும் வாழ்க்கையை அவர்தான் கற்பிக்கிறார்"

அன்று முதல்

குழந்தைகள் காலையில் பள்ளி,மாலையில் தாத்தாவின் குடிசை எனக் கற்றுக்கொள்ள ஆரம் பித்தன. மறுநாள் ஆசிரியர் கரும்பலகையில் எழுதினார், "படிப்பு வாழ்க்கைக்கு உதவும் ஆனால், இயற்கையோடு வாழும் வாழ்க்கை யையே கற்றுக் கொள்பவன்தான் உண்மையான அறிவாளி"

குழந்தைகள் ஓங்கிக் கை தட்டினார்கள்.

– முகில் தினகரன்
கோயமுத்தூர்.



# மீம்ஸ் கலாட்டா










100 திருமணமான ஆண்கள் கூட்டத்தில் "பெண்டாட்டியிடம் அடிவாங்கியவர்கள் கை தூக்குங்கள்" என்று கேட்கப்பட்டது.

ஒருவர் தவிர எல்லோரும் கைகளை உயர்த்தினார்கள்.

கை தூக்காத அந்த நபரை அழைத்து "பரவாயில்லையே உங்கள் மனைவி அனுசரணையானவர் போலும், நீங்கள் அதிர்ஷ்ட்டசாலி" என புழ்ந்தனர்.

அதற்கு அவர் சொன்னார்....
"அடப்போங்கப்பா, நீங்கவேற வயித்தெரிச்சல கௌப்பாதீங்க...

நேத்து வாங்கின அடியில கையவே தூக்க முடில"

www.panmugam.com பண்முகம் காம் மலர்-1 இதழ்-2 20-05 ஜூலை 2022

# மீம்ஸ் கலாட்டா


ஆன்லைன்ல டிரஸ்
வாங்காதன்னு சொன்னா
கேட்டாத்தானே..


*frnd
ஏன்டா எப்போ பாரு மீம்ஸ் share
பண்ணிக்கிட்டு இருக்க..
*me
4 பேரு சிரிக்கிறாங்கனா 40 memes share
பண்றதுல தப்பே இல்ல



ஆட்டம் முடிந்ததும்
ராஜாவும் சிப்பாயும்
ஒரே பெட்டியில்...
இவ்வளவுதான்
வாழ்க்கை...


Vera Level Comments
தேங்காய் சட்னியை கடைசியில் தாளித்து
சேர்ப்போம். அதற்கு பதிலாக அதே தாளித்த
பொருட்களை சட்னியில் சேர்த்து அரைத்தால்
கூடுதல் சுவையுடன் இருக்கும்.
Gazai Mesividal
நான் தென்னை மரத்தின் கீழேயே
தினமும் ஒரு கரண்டி தாளித்து
கொட்டி விடுவேன். சட்னி
அரைக்கும் போது தாளிக்க
வேண்டியது இல்லை
6h Like Reply 5

# கேள்வியை நாங்கள் கேட்கிறோம் பதிலை நீங்கள் சொல்லுங்கள்




தமிழ்நாடு இ பேப்பர்.காம் வழங்கும் சூப்பரான பரிசை வெல்லுங்கள்...!





தினமும் வெளிவரும் நமது

## தமிழ்நாடு இ பேப்பர்.காம்

இணையதள நாளிதழை தொடர்ந்து படியுங்கள், தினமும் நாளிதழில் வெளிவரும் செய்திகள் குறித்து கேள்வி கேட்கப்படும், சரியான பதிலை கீழ்காணும் வாட்சப் எண்ணிற்கு அனுப்பிவைத்தால் குலுக்கல் முறையில் அற்புதமான பரிசுகள் வழங்கப்படும்.

**Whatsup no.8122664699**



சுடச்சுட செய்திகளை
அதிகாலை வேலையில்
தெரிந்துகொள்ள
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
தமிழ்நாடு
இ/பேப்பர்
படியுங்கள்

# மருந்துகள் என்றால் என்ன?

1. சீக்கிரம் தூங்குவதும், அதிகாலையில் எழுவதும் மருந்து.
2. காலையில் கடவுளை நினைவு கூர்வது ஒரு மருந்து.
3. யோகா, பிராணாயாமம், உடற்பயிற்சி ஆகியவை மருந்துகள்.
4. காலை, மாலை நடைப்பயிற்சியும் மருந்து.
5. நோன்பு எல்லா நோய்களுக்கும் மருந்து.
6. சூரிய ஒளியும் மருந்துதான்.
7. மண்பானை நீரைக் குடிப்பது ஒரு மருந்து.
8. கை தட்டுவதும் மருந்துதான்.
9. நன்றாக மென்று சாப்பிடுவது மருந்து.
10. தண்ணீர் குடிப்பதும், மனதளவில் சாப்பிடுவதும் மருந்துகள்.
11. சாப்பிட்ட பின் வஜ்ராசனத்தில் அமர்வது மருந்து.
12. மகிழ்ச்சியாக இருக்க முடிவு செய்வது மருந்து.
13. சில நேரங்களில் மௌனமே மருந்து.
14. சிரிப்பும் நகைச்சுவையும் மருந்து.
15. மனநிறைவே மருந்து.
16. மனதுக்கும் உடலுக்கும் அமைதி மருந்து.
17. நேர்மையும் நேர்மறையும் மருந்துகள்.
18. தன்னலமற்ற அன்பும் உணர்ச்சிகளும் மருந்துகள்தான்.
19. பிறருக்கு நன்மை செய்வதே மருந்து.
20. அறம் தரும் ஒன்றைச் செய்வதே மருந்து.
21. பிறருடன் இணக்கமாக வாழ்வதே மருந்து.
22. உண்பதும், குடிப்பதும், குடும்பத்துடன் நேரத்தை செலவிடுவதும் மருந்து.
23. ஒவ்வொரு உண்மையான மற்றும் நல்ல நண்பரும் பணம் இல்லாத ஒரு முழுமையான மருத்துவக் கடை.
24. குளிர்ச்சியாகவும், பிஸியாகவும், ஆரோக்கியமாகவும், உற்சாகமாகவும் இருப்பது மருந்து.
25. ஒவ்வொரு புதிய நாளையும் முழுமையாக அனுபவிப்பது மருந்து.





# ஐந்து முட்டாள்கள்

ஒரு நாட்டை ஆண்டு கொண்டிருந்த மன்னருக்குத் திடீரென ஒரு சந்தேகம் உதித்தது. உடனடியாக அமைச்சரை வரவழைத்தார். நான் இந்த நாட்டை இவ்வளவு நன்றாகவும், புத்திசாலித்தனத்துடனும் ஆண்டு வருகிறேன், ஆனால் இந்த நாட்டிலும் முட்டாள்கள் இருப்பார்கள் அல்லவா? ஆம் மன்னா! அப்படியானால் அவர்களில் முதல் ஐந்து முட்டாள்கள் யார்?? அவர்களைத் தேடிக் கண்டுபிடித்துக் கூட்டிக் கொண்டு வருவது உம் பொறுப்பு என்றார்.

அமைச்சருக்கு ஒன்றுமே புரியவில்லை, புத்திசாலியைக் கொண்டு வரச் சொன்னால் ஏதாவது போட்டி வைத்து வெற்றியாளரைக் கொண்டு வரலாம்.

முட்டாளைக் கொண்டு வரச் சொன்னால்?? என்ன செய்வது சொன்னது மன்னராயிற்றே, சரி மன்னா என்று ஒத்துக் கொண்டார். ஒரு மாதம் நாடு முழுவதும் பயணம் செய்து இரண்டு பேரை மட்டும் கூட்டிக்கொண்டு வந்தார். அதைப் பார்த்ததும் மன்னர், அமைச்சரே உமக்குக் கணிதம் மறந்து விட்டதோ?? இல்லை மன்னா! முதலில் நடந்ததை விளக்க அனுமதிக்க வேண்டும்! என்றார் அமைச்சர். தொடரும் என்றார் மன்னர்.

மன்னா! நான் நாடு முழுவதும் சுற்றும் போது, இவன் மாட்டு வண்டியின்மேல் அமர்ந்து கொண்டு தன் துணி மூட்டையைத் தலைமேல் வைத்து, பயணம் செய்து கொண்டிருந்தான், ஏன் அவ்வாறு செய்கிறாய்? எனக் கேட்டதற்கு என்னைச் சுமந்து செல்லும் மாடுகளுக்கு வலிக்கக்கூடாதல்லவா? அதற்குத்தான் என்றான். இவன்தான் நம் நாட்டின் ஐந்தாவது மிகப் பெரிய முட்டாள் என்றார் அமைச்சர்.

சரி அடுத்து, இதோ இவன் தன்வீட்டுக் கூரைமேல் வளர்ந்த புல்லை மேய்க்க, எருமையைக் கூரைமேல் இழுத்துக் கொண்டிருந்தான், இவன்தான் நம் நாட்டின் நான்காவது மிகப் பெரிய முட்டாள். களிப்படைந்தோம் அமைச்சரே! களிப்படைந்தோம்! சரி, எங்கே அடுத்த முட்டாள்?



அரசவையில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனைகள் எவ்வளவோ இருக்கும்போது, அதையெல்லாம் விட்டுவிட்டு முட்டாள்களைத் தேடி, கடந்த ஒரு மாதமாய் அலைந்துகொண்டிருந்த நான்தான் மூன்றாவது முட்டாள். மன்னருக்குச் சிரிப்பு தாங்கவில்லை, விழுந்து விழுந்து சிரித்தார். பின்னர் அடுத்தது என்றார்.

நாட்டில் எவ்வளவோ பிரச்சனைகள் இருக்கும் போது அதைக் கவனிக்காமல் முட்டாள்களைத் தேடிக் கொண்டிருக்கும் நீங்கள் தான் இரண் டாவது என்றார் அமைச்சர். ஒரு நிமிடம் அரசவையே ஆடிவிட்டது. யாரும் எதுவும் பேசவில்லை. உமது கருத்திலும் நியாயம் உள்ளது. நான் செய்ததும் தவறுதான் என ஒத்துக் கொண்டார் மன்னர். சரி எங்கே முதலாவது முட்டாள்?



அமைச்சர் சொன்னார். மன்னா ! அலுவலகத்திலும், வீட்டிலும் எவ்வளவோ வேலைகள் இருந்தாலும் அதையெல்லாம் விட்டு விட்டு ஃபேஸ்புக்கே குடியேன் வாழ்ந்து இந்த மொக்கையான கதைக்கு வந்து நாட்டின் மிகப் பெரிய முட்டாள் யாரென்று தேடிக் படித்துகொண்டிருக்கிறாரே இவர்தான் அந்த முதல் முட்டாள் !.

- Govinda rajan






# அமெரிக்கர்களின் அற்புத பண்பு!

கடந்த பிப்ரவரி மாதம் நண்பர்களுடன் அமெரிக்காவின் துசான் (Tucson)நகரத்திற்குச் சென்றிருந்தேன். சுமார் 13 தினங்கள் அங்கே தங்கி இருந்தோம். நண்பர் வாடகைக் காரை எடுத்திருந்தார். நாமே ஓட்டுநர்.

ஒருநாள் இரவு நேரம். காரின் ஒரு சக்கரத்தில் காற்று குறைவாக இருந்தால், காற்று பிடிக்க பெட்ரோல் பங்க் சென்று இருந்தோம்.

காற்று பிடிக்கும் கருவியில் மூன்று டாலர் பணத்தைப் போட்டால் காற்று பிடித்துக்கொள்ளலாம்! அதில் எப்படி பணம் போடுவது, எப்படி அதை இயக்குவது என்று நாங்கள் சற்று தயங்கிக் கொண்டிருந்தோம்!

அப்போது அருகில் நின்றிருந்த, அந்த நகரத்தின் நிர்வாக அமைப்பின் காரில் ஏற வந்த இரு ஊழியர்கள் எங்களைப் பார்த்து சூழ்நிலையை புரிந்து கொண்டார்கள். அதில் ஒருவர் 'ஹலோ ஃபிரண்ட்ஸ்' என்று கூறிக் கொண்டே எங்கள் அருகில் வந்தார்.

தன்னிடமிருந்து கிரெடிட் கார்டை எடுத்து,




கருவியில் வைத்து அதை தேய்த்து விட்டு மூன்று டாலர் கிரெடிட் ஆனதும் கார்டை எடுத்துக் கொண்டு விட்டார். 'இப்போது காற்றைப் பிடித்துக் கொள்ளுங்கள்' என்று (ஆங்கிலத்தில்தான்) சொல்லிவிட்டு காரில் ஏறிக்கொண்டார். நாங்கள் எங்களிடமிருந்து பணத்தை எடுத்து அவரிடம் கொடுக்கும் போது அவர் வாங்க மறுத்து விட்டார். "இட்ஸ் ஓகே" என்று சொல்லி உடனே இருவரும் புறப் பட்டு சென்று விட்டார்கள்.

'வந்தார்கள். தேய்த்தார்கள். கிரெடிட் ஆன தும் சென்று விட்டார்கள்' என்று நாங்கள் ஆச்சரியத்தில் நின்றோம்.

எங்கள் காரை ஓட்டிய நண்பர் சொன்னார்:

"இங்கு உள்ளவர்களுன் பண்புதான் இது. உதவி செய்வார்கள்! நாம் அதை ஏற்றுக் கொண்டு தேங்க்ஸ் சொன்னதும் மகிழ்ச்சியுடன் புறப்பட்டு சென்று விடுவார்கள். அவர்களை மீண்டும், மீண்டும் பணத்தைப் பெற்றுக் கொள்ளச் சொல்லி வற்புறுத்தக் கூடாது. இங்கு உள்ளவர்கள் மற்றவர்களுக்கு உதவி செய்ய ஆசைப்படுவார்கள்" என்று சொன்னார்.

அமெரிக்கர்களின் உதவும் மனப் பான்மையை நினைத்து நாங்கள் அனைவரும் ஆச்சரியப்பட்டோம்.

அ.முஹம்மது நிஜாமுத்தீன்,
பேங்காக், தாய்லாந்து.



# துன்பத்தில் இருப்பவருக்கு ஆறுதல்...!"



நீங்கள் அக்கறை கொண்ட ஒருவர் துன்பத்தில் துவளும் போது, உடனடியாக ஒரு தீர்வைக் கண்டு அவர்களை ஆறுதல் சொல் லுங்கள். உற்சாகப்படுத்துங்கள்.. .

சில வாய்ப்புகளில், வலியைப் போக்கக் கூடிய ஒரே மருந்து !, உங்கள் அன்பான ஆறு தல் வார்த்தைகளே. அவர்களுக்கு ஆறுதல் சொல்லி நல்ல ஆலோசனை வழங் குங்கள்...

அன்பு காட்டுவதற்கும் நல்ல செயல்கள் செய்வதற்கும் ஒருவரை ஒருவர் உற்சாகப் படுத்தி, ஒருவர் மீது ஒருவர் ஆழ்ந்த அக்கறை காட்ட வேண்டும்...

ஒரு கிராமத்தில் ஒருவர் இரும்பு பொருட்கள் செய்து, அதை விற்று வாழ்க்கை நடத்தி வந்தார். அவருக்கு அன்பும், அழகும் நிறைந்த மனைவி இருந்தார்...

மகிழ்ச்சியாக சென்று கொண்டிருந்த அவரது வாழ்க்கையில் சோதனைக் காலம் வந்தது. அவர் செய்து கொண்டு இருந்த தொழில் நலிவடைந்தது.

இதனால் !, வருமானம் குறைந்து உணவுக்கே வறுமை என்ற நிலை வந்து விட்டது. இதனால் அவர் மனதில் விரக்தியும்,; கவலையும் குடிக் கொண்டது...

ஒருநாள் அவர் மாலை வேளையில் வானத்து விண்மீன்களை பார்த்துக் கொண்டிருந்தார். அவரது மனதில் எதிர்காலம் குறித்த கவலைகள் எழுந்து கண்ணீர்த் துளிகளாய்



வலிந்தோடியது...

இதைக் கண்ட மனைவி ஆறுதலாய்ப் பேசினார். என்னங்க !, எதற்காக இப்படி கண் கலங்குறீர்கள். இந்தத் தொழில் இல்லையெனில் என்ன !?, அடுத்த வயலில் சென்று விறகு வெட்டி, அதனை, அடுத்து இருக்கின்ற கிராமத்தில் விற்றால் பணம் கிடைக்குமே !. அதனை வைத்து நாம் வாழலாமே என்றார்...

மனைவியின் ஆறுதல் அவருக்கு புது நம்பிக்கை, புது உற்சாகத்தைக் கொடுத்தது...

அடுத்த நாளே காட்டிற்கு சென்று விறகுகளை வெட்டி விற்று வந்தார். இந்த தொழிலால் அவருக்கு ஓரளவு வருமானம் கிடைத்தது. இருந்தாலும் அவரதுது மனதில் சற்று சோகமும் இருந்தது...

மனைவி ஒருநாள் தன் கணவனிடம், என்னோட நகைய விற்றால் கொஞ்சம் பணம் கிடைக்கும். அதை மூலதனமாக வைத்து நாம் ஒரு விறகுக் கடை வைக்கலாம். கடை வைத்துவிட்டால் எந்த நேரமும் மக்கள் விறகு வாங்குவதற்காக வருவார்கள், நமக்கும் நல்ல வருமானம் கிடைக்கும் என்றார்...

இதைக்கேட்டு அவர் மீண்டும் புத்துணர்ச்சி பெற்றார். விறகு வெட்டியாக இருந்தவர் விறகுக் கடை முதலாளி ஆனார். இதனால் வருமானம் பெருகியது. மகிச்சியுடன் குடும்பம் நடத்திக் கொண்டு இருக்கையில், மீண்டும் அவரது வாழ்க்கையில் சோதனை ஆரம்பித்தது...

திடீரென்று ஒருநாள் அவரது விறகுகடையில் தீப்பிடித்து, அத்தனை மூலதனமும் கரிக் கட்டையாகி விட்டது. இதைக்கண்டு கதறி அழுதார். நண்பர்கள் பலரும் வந்து அவருக்கு ஆறுதல் கூறினார்கள்...

மனைவி கணவனின் கண்ணீரைத் துடைத்து, இப்போது என்ன நடந்து விட்ட தென்று அழுகிறீர்கள், விறகு எரிந்து வீணாக வில்லையே, கரியாத் தானே ஆகியிருக்கிறது...

நாம் நாளையிலிருந்து கரி வியாபாரம் செய்வோம் என்றார், இதைக் கேட்டப் பின் அவருக்கு தனது வாழ்க்கையில் மீண்டும் நம்பிக்கை ஒளி தெரிந்தது...

ஆம் நண்பர்களே...!

ஆறுதல் கூறவும், ஊக்குவிக்கவும், உற்சாகப்படுத்தவும் ஒருவர் நம்முடன் இருந்தால் விண்மீனையும் எட்டிப் பிடித்துவிடலாம்...!*ன



வாழ்க்கையில், நமக்கு ஏற்படும் துன்பத்தில் இருந்து மீள ஏதேனும் ஒரு வழி இருக்கும். அதனை சரியான தருணத்தில் பயன்படுத்தினால் உறுதியாக வாழ்வில் வெற்றி பெறலாம்...!!

– முத்து ஆனந்த்,



# பணபலத்தாலும் உடல் வலிமையாலும் ஆட்டம் போடும் பலரின் நாளைய நிலைமை!

வலிமை மிகுந்த சிங்கம் கூட ஒரு காலத்தில் காட்டின் ராஜாவாக வேட்டையாடி ஆட்சி செய்தாலும், காலம் மாறும்போது வயது, பசி, நோய் ஆகியவற்றால் வாடி வதங்கி எலும்பும் தோலுமாக மாறி விடுகிறது. இயற்கை நமக்கு காட்டும் இந்த உண்மை மனித வாழ்க்கைக்கும் பொருந்தும் ஒரு பெரிய பாடமாகும்.

இன்று அதிகாரம், செல்வம், உடல் வலிமை என்று பெருமைபடும் பலரும் காலம் மாறும் போது அதையே இழந்து சாதாரண மனிதர்களாக மாறியிருப்பதை வரலாறு பலமுறை நிரூபித்துள்ளது. உலக வரலாற்றில் பெரிய சக்தியாக எழுந்த பல பேரரசுகள் கூட ஆணவம், அதிகாரத்தின் தவறான பயன்பாடு, உள்நாட்டு பிரச்சினைகள் ஆகியவற்றால் வீழ்ச்சியடைந்துள்ளன.

உலகை கைப்பற்ற வேண்டும் என்ற பேராசையுடன் எழுந்த ஜெர்மனியின் ஆட்சியாளர் தனது இராணுவ வலிமை மற்றும் அதிகாரத்தின் மீது அதிக நம்பிக்கை வைத்திருந்தார். ஆனால் இறுதியில் அவரது ஆட்சி முற்றிலும் சிதைந்து, அவர் தானும்




தன் வாழ்க்கையை இழந்தார். அதேபோல்ஒரு காலத்தில் உலகின் மிக வலிமையானபேரரசாக இருந்த ரோமப் பேரரசும் அதிகாரப் போட்டிகள், ஆடம்பரம் மற்றும் ஆணவம் காரணமாக முற்றி லும் வீழ்ச்சியடைந்தது. வரலாறு தெளிவாக சொல்லும் உண்மை என்னவெனில் எந்த அதிகாரமும், எந்த செல்வமும் நிரந்தரமல்ல.

நம் வாழ்க்கையிலும் இதே உண்மை பொருந்துகிறது. இன்று பணம் இருப்பதால் மற்றவர்களை இகழ்ந்து பேசுவது, தன்னை உயர்ந்தவன் என்று நினைப்பது, பலவீனமானவர்களை மதிக்காமல் இருப்பது போன்ற பண்புகள் மனிதனை இறுதியில் தனிமையிலும் வீழ்ச்சியிலும் தள்ளும். பணம் என்பது மனிதனின் மதிப்பை நிர்ணயிக்கும் அளவுகோல் அல்ல. உடல் வலிமையும் இளமை இருக்கும் வரை மட்டுமே. காலம், வயது, நோய் ஆகியவற்றின் முன் மனிதன் மிகவும் பலவீனமானவன் என்பதை நாம் மறக்கக் கூடாது.

வரலாற்றில் மிகப்பெரிய செல்வந்தர்களும் பொருளாதார நெருக்கடி, அரசியல் மாற்றம் அல்லது சூழ்நிலை காரணமாக அனைத்தையும் இழந்த சம்பவங்கள் ஏராளம். இதனால் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான பாடம் ஒன்று தான்

எந்த நிலையும் நிரந்தரமல்ல.

ஆகையால் மனிதன் எப்போதும் பணிவுடன் வாழ வேண்டும். பிறரை மதிக்க வேண்டும். அதிகாரம் அல்லது பணம் கிடைத்தாலும் அது தற்காலிகமானது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் உண்மையான மதிப்பு மனிதாபிமானத்திலும் நல்லொழுக்கத்திலும் தான் இருக்கிறது. இன்று பலம் கொண்டவன் நாளை பலவீனமாகலாம்; இன்று கீழே இருப்பவன் நாளை மேலே வரலாம். காலத்தின் சுழற்சி எல்லோரையும் ஒரே நிலைக்கு கொண்டு வரும்.


அதனால் தான் பழமொழி ஒன்று கூறுகிறது:

"ஆணவம்_அழிவைத்_தரும்."

மனிதன் எவ்வளவு உயர்ந்தாலும் அவன் மனிதனே என்பதை மறந்துவிடக் கூடாது. பிறரை இகழ்ந்து பேசும் அகந்தையையும் அதிகாரத்தின் ஆணவத்தையும் விட்டுவிட்டு அனைவரையும் சமமாக மதித்து வாழ்வதே மனித வாழ்க்கையின் உயர்ந்த பண்பாகும்.

இன்று வலிமையுடன் இருக்கும் சிங்கம் கூட நாளை பலவீனமாக மாறும் போது, மனிதன் தனது பலத்தையும் செல்வத்தையும் பெருமையாக எண்ணி மற்றவர்களை தாழ்வாக பார்க்கக் கூடாது.

பணமும் உடல் பலமும் நிலையற்றவை; ஆனால் மனிதன் காட்டும் பணிவும் மனிதத்து வமும் தான் என்றும் நிலைத்திருக்கும் உண் மையான சக்தி.



# 13 ஆண்டுகளாக உழைத்து ஓடாக நிற்கும் கியூரியாசிட்டி ரோவர்!

செவ்வாய் கிரகத்தின் கரடுமுரடான பாதையில் 13 ஆண்டுகளாகப் போராடும் நாசாவின் கியூரியாசிட்டி ரோவர், அதன் சக்கரங்கள் சேதமடைந்தாலும், தளராமல் ஆய்வைத் தொடரும் இந்த விண்வெளி வீரனின் வியக்கத்தக்க பயணத்தையும், நாசா வெளியிட்ட புதிய புகைப்படங்களையும் பற்றி பார்ப்போம்.

செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கி ஒரு தசாப்தத்திற்கும் மேலாகப் பயணித்து வரும் நாசாவின் கியூரியாசிட்டி ரோவர் (Curiosity rover), கடும் சவால்களுக்கு இடையேயும் தனது ஆய்வைத் தொடர்ந்து வருகிறது. சமீபத்தில் வெளியாகியுள்ள புகைப்படங்கள், செவ்வாயின் கரடுமுரடான நிலப்பரப்பால் அந்த ரோவரின் சக்கரங்கள் எந்தளவுக்குச் சேதமடைந்துள்ளன என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளன.

கியூரியாசிட்டி ரோவரின் ஆறு சக்கரங்களும் வெறும் 0.75 மில்லிமீட்டர் தடிமன் கொண்டவை (அதாவது ஒரு நாணயத்தின் தடிமனில் பாதி மட்டுமே). இவை ஒரு தனி அலுமினியக் கட்டியில் இருந்து செதுக்கப்பட்டவை. 2012 ல் தரையிறங்கிய போது, இந்த ரோவர் வெறும் 2 ஆண்டுகள் மட்டுமே செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டது. ஆனால், எதிர்பார்ப்புகளை மீறி 13 ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் இது, இதுவரை 35.5 கிலோமீட்டர் தூரத்தைக் கடந்து சாதனை படைத்துள்ளது.



ரோவர் தரையிறங்கிய 14 மாதங்களிலேயே அதன் சக்கரங்களில் ஓட்டைகளும் விரிசல் களும் ஏற்படத் தொடங்கின. செவ்வாய் கிரகத் தின் கூர்மையான பாறைகள் அலுமினியச் சக்கரங்களைத் துளைக்கத் தொடங்கின. இதைக் கையாள, அப்பல்லோ 13 விண்கலப் பாதிப்பின் போது அமைக்கப்பட்டது போன்ற ஒரு 'வீல் வேர் டைகர் டீம்' (Wheel Wear Tiger Team) என்ற நிபுணர் குழுவை நாசா அமைத்தது.

அவர்கள் செய்த மாற்றங்கள், 2017ல் பூமியிலிருந்து ஒரு புதிய அல்காரிதம் பதிவேற் றப்பட்டது. இது சக்கரங்களின் வேகத்தை அவ்வப்போது மாற்றியமைத்து அழுத்தத்தைக் குறைக்க உதவியது.

கூர்மையான பாறைகளைக் கடக்கும்போது சக்கரங்களின் மீதான விசையைக் குறைக்க, ரோவரைப் பின்புறமாக (Backward) இயக்கும் முறையை விஞ்ஞானிகள் கையாண்டனர்.

ஒருவேளை சக்கரங்கள் மிக மோசமாகச் சேதமடைந்தால், கூர்மையான பாறை ஒன்றின் உதவியுடன் சக்கரத்தின் உடைந்த பகுதியைத் துண்டித்துவிட்டு, மிச்சமுள்ள பகுதியைக் கொண்டு பயணத்தைத் தொடரும் வசதியும் இதில் உள்ளது. ஆனால், இத்தகையதீவிர மான நடவடிக்கை 2034ம் ஆண்டு வரை தேவைப்படாது என விஞ்ஞானிகள் கருதுகின் றனர்.

கியூரியாசிட்டி ரோவரின் சக்கரங்களில் மோர்ஸ் கோட் முறையில் 'யிறிலி' (Jet Propulsion Laboratory) என்ற எழுத்துக்கள் துளை களாக இடப்பட்டுள்ளன.

ரோவர் பயணிக்கும் போது மணலில் விழும் இந்தத் தடம், அது எவ்வளவு தூரம் கடந்துள்ளது என்பதைக் கணக்கிட உதவு கிறது.

கியூரியாசிட்டி ரோவரின் சக்கரங்கள் சந்தித்த பாதிப்புகளைக் கருத்தில் கொண்டே, அடுத்ததாக அனுப்பப்பட்ட பெர்ஸவரன்ஸ் (Perseverance) ரோவரின் சக்கரங்கள் அதிகத் தடிமனுடனும், கூடுதல் வலிமையுடனும் வடிவமைக்கப்பட்டன.

காயங்கள் பட்டாலும், இலக்கை நோக்கிச் சளைக்காமல் நகரும் கியூரியாசிட்டி ரோவர், விண்வெளி ஆய்வில் மனிதகுலத்தின் விடா முயற்சிக்கு ஒரு சிறந்த சான்றாகும்.

அன்றாடச் செய்திகளை துல்லியமாக தரும்

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com









எந்தவித

மறை முக

கட்டணமும் இல்லை

சந்தா, சப்ஸ்கிரிப்ஷன் இல்லை,

உங்கள் பகுதியில் நடைபெறும்

நிகழ்ச்சிகளை எங்களுக்கு

தெரியபடுத்துங்கள், நமது

இ–பேப்பரை படித்து

பயன்பெறுங்கள்,

**Whatsup no.8122664699**



TamilnaduEpaper.com

# இந்தியாவின் கச்சா எண்ணெய் இருப்பு எப்படி கட்டுப்பாட்டில் இருக்கிறது?



இந்தியாவின் மூலோபாய எண்ணெய் இருப்பு ஐந்து நாட்களுக்கான தேவையை மட்டுமே பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் உள்ளன; அவற்றின் மொத்த கொள்ளளவில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமான பகுதி காலியாக உள்ளது என்று பிபிசி ஆய்வு கூறுகிறது.

2025 ஆம் ஆண்டு இந்திய தலைமை கணக்குத் தணிக்கையாளர் வெளியிட்ட அறிக்கையின்படி, இந்தச் சேமிப்பு வசதிகள் பல ஆண்டுகளாக முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை.

எரிபொருள் பற்றாக்குறை ஏற்படும் என்ற அச்சம் பல இந்திய நகரங்களில் பீதியுடன் பொருட்களை வாங்க வழிவகுத்துள்ளது, அதே வேளையில் பெட்ரோல் மற்றும் டீசல் போதுமான அளவு கையிருப்பில் இருப்பதாக மத்திய அரசு கூறுகிறது.

மாநிலங்களவையில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோதி, இந்தியாவிடம் போதுமான கச்சா எண்ணெய் இருப்பு இருப்பதாக உறுதியளித்தார். இந்தியா தனது கச்சா எண்ணெய் இறக்குமதியைப் பன்முகப்படுத்தியுள்ளதாகவும், நெருக்கடியைச் சமாளிக்கச் சேமிப்பிற்கு முன்னுரிமை அளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இருப்பினும், இந்த வாரம் பெட்ரோலியம் மற்றும்

இயற்கை எரிவாயுத்துறை இணை அமைச்சர் சுரேஷ் கோபி மாநிலங்களவையில் கூறுகையில், இந்தியாவின் கச்சா எண்ணெய் இருப்பு அதன் மொத்த கொள்ளளவில் சுமார் 64% மட்டுமே என்று தெரிவித்தார்.

மாநிலங்களவையில் அளிக்கப்பட்ட பதிலின்படி, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகாவில் உள்ள மூன்று இடங்களில் உள்ள மூலோபாய இருப்புகளில் 5.33 மில்லியன் மெட்ரிக் டன் கச்சா எண்ணெயைச் சேமித்து வைக்கும் திறன் இந்தியாவிடம் உள்ளது.

இதில், தற்போது 3.372 மில்லியன் மெட்ரிக் டன் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளது, அதாவது கொள்ளளவில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமான பகுதி காலியாக உள்ளது.

இந்த இருப்புகள் அரசாங்கத்தால் உருவாக்கப் பட்ட ஒரு சிறப்பு நிறுவனமான இந்திய மூலோபாய பெட்ரோலிய இருப்பு நிறுவனத்தின்(ஐ. எஸ்.பி.ஆர்.எல்) மூலம் நிர்வகிக்கப்படுகின்றன.

இந்தியா ஒவ்வொரு மாதமும் சுமார் 20 மில்லி யன் மெட்ரிக் டன் பெட்ரோலியப் பொருட்களைப் பயன்படுத்துகிறது, அதாவது சராசரியாக நாளொன்றுக்கு சுமார் 0.67 மில்லியன் மெட்ரிக் டன் ஆகும்.

தற்போதைய நிலையில், மூலோபாய இருப்பு கள் சுமார் ஐந்து நாட்களுக்கு மட்டுமே போது மானதாக இருக்கும்.

இந்த மூலோபாய இருப்புகளுடன் கூடுதலாக, எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்கள் 64.5 நாட்களுக்கான தேவைக்கு சமமான கை யிருப்பைக் கொண்டுள்ளதாகக் கடந்த ஆண்டு அரசாங்கம் மாநிலங்களவையில் தெரிவித்தது.

இந்தியாவின் மொத்த சேமிப்புத் திறனுடன், ஐ.எஸ்.பி.ஆர்.எல்இன் 9.5 நாட்களுக்கான கையிருப்பையும் சேர்த்தால், அது தோராயமாக 74 நாட்களாகும்.

இந்தியா கச்சா எண்ணெயைப் பயன்படுத்து வதில் உலகில் மூன்றாவது பெரிய நாடாக உள்ளது மற்றும் அதன் தேவையில் 88 சதவிகிதத்திற்கும் அதிகமானவற்றை இறக்குமதி செய்கிறது.

வர்த்தக அமைச்சகத்தின் தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டில் இந்தியாவின் கச்சா எண் ணெய் இறக்குமதியில் 50 சதவிகிதத்திற்கும் அதிகமானவை மத்திய கிழக்கிலிருந்து, முக்கி யமாக இராக், சௌதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற நாடுகளில் இருந்து வந்துள்ளன.

2019 மற்றும் 2022க்கு இடையில், இந்தச் சார்பு நிலை 60 சதவிகிதத்திற்கும் அதிகமாகச் சென்றிருந்தது.

இந்த அதிகப்படியான சார்பு நிலையைக் கருத்தில் கொள்ளும்போது, இத்துறையில் ஏற் படும் எந்தவொரு இடையூறும் விநியோகத்தைப் பாதிக்கக்கூடும்.

இத்தகைய சூழ்நிலைகளில் அல்லது திடீர் விலை மாற்றங்களின் போது ஒரு பாதுகாப்பு வளையமாக செயல்படும் வகையில் மூலோபாய இருப்பு உள்ளது.

மதிப்பீட்டு நிறுவனமான ஐசிஆர்ஏவின் மூத்த துணைத் தலைவர் பிரசாந்த் வசிஷ்ட் பிபிசியிடம் கூறுகையில், "நமது மூலோபாய எண்ணெய் இருப்புகள் மிகக் குறைவாக உள்ளன. எரிசக்தி அமைச்சர் கூறியது போல், ஒருங்கிணைந்த மூலோபாய மற்றும் செயல்பாட்டு இருப்புகள் சுமார் 74 நாட்களுக்கு மட்டுமே உள்ளது. நாம் இறக்குமதியை பெரிதும் நம்பியிருப்பதால் இது ஒரு பலவீனமாகும். காலப்போக்கில், அரசாங்கம் தனது சேமிப்புத் திறனை அதிகரித்துள்ளதோடு, அதை மேலும் அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது என்று நான் நம்புகிறேன்," என்றார்.

இந்தியாவின் எதிர்கால உத்தி குறித்து வசிஷ்ட் கூறுகையில், "முதலாவது, செயல்பாட்டு மற்றும் மூலோபாய இருப்புகளை அதிகரிப்பது. இரண்டாவது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் மீதான சார்பை அதிகரிப்பது. மூன்றாவது, உற்பத்தியை அதிகரிக்க நமது உள்நாட்டு எண்ணெய் மற்றும் எரிவாயுத் துறையை வலுப்படுத்துவது" என்று தெரிவித்தார்.

ஒருங்கிணைந்த ஆராய்ச்சி மற்றும் நடவடிக் கைக்கான மேம்பாட்டு அமைப்பின் தலைவரும், முன்னாள் திட்டக்குழு உறுப்பினருமான கிரித் பரிக் பிபிசியிடம் கூறுகையில், "எண்ணெய் தேவையை விரைவாகவும் விரிவாகவும் குறைப் பதற்கான பணத்தைச் செலவிடுவதே சிறந்த உத்தியாக இருக்கும். தேவையை உடனடியாகக் குறைப்பதற்கான வழிகள் இருப்பதாக நான் நம்புகிறேன். நாங்கள் ஏற்கனவே அவற்றில் பணியாற்றி வருகிறோம். நாம் அதை விரைவு படுத்தினால் போதும்" என்றார்.

சேமிப்புத் திறன் முழுமையாகப் பயன்படுத் தப்படவில்லை என்று சிஏஜி அறிக்கை கூறி யுள்ளது.

2024 நிதியாண்டில், 3.98 எம்எம்டி கொள்ளளவு கொண்ட நிலத்தடி பாறை குகைகளில் 2.91 எம்எம்டி கச்சா எண்ணெய் மட்டுமே இருந்தது, இதனால் 27% காலியாக இருந்தது.



இந்தியாவில் நிலத்தடி பாறை குகைகளில் கச்சா எண்ணெய் சேமிக்கப்படுகிறது. இந்த குகைகள் பாறைகளில் செதுக்கப்பட்ட பெரிய செயற்கை இடங்களாகும். இந்த குகைகளிலிருந்து கச்சா எண்ணெய் குழாய்கள் மூலம் இந்திய சுத்திகரிப்பு நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

சேமிப்புத் திறனை அதிகரிப்பதில் நிலவும் முன்னேற்றம் மந்தமாக இருப்பது குறித்தும் இந்த அறிக்கை கேள்வி எழுப்பியுள்ளது.

"முதல் கட்டத்தில் 19 நாட்கள் இறக்குமதியை ஈடுசெய்யும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், அரசாங்கம்/ஐஎஸ்பிஆர்எல் 5.33 மில்லியன் டன்கள் (எம்எம்டி) சேமிப்புக் கொள்ளளவை மட்டுமே உருவாக்கியுள்ளது. இது (மார்ச் 2024க்குள்) 7.88 நாட்கள் இறக்குமதியை மட்டுமே பூர்த்தி செய்யும்" என்று அந்த அறிக்கை தெரிவித்தது.

இது குறித்து கருத்து கேட்க ஐ.எஸ்.பி.ஆர். எல்ஐ பிபிசி தொடர்பு கொண்டது, ஆனால் இதுவரை எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. பதில் கிடைத்தவுடன் இந்த செய்தி புதுப்பிக்கப்படும்.

உலகளவில், சர்வதேச எரிசக்தி முகமை 90 நாட்களுக்கான இறக்குமதிக்கு இணையான இருப்பை வைத்திருக்கப் பரிந்துரைக்கிறது.


டிசம்பர் 2025 நிலவரப்படி, ஜப்பான் 208 நாட்களுக்கான இறக்குமதி இருப்புகளையும், தென்கொரியா சுமார் 200 நாட்களுக்கான கையிருப்பையும் கொண்டிருந்தன.

சீனாவின் சுமார் 120 நாள் இறக்குமதி செய்யும் அளவுக்கு இணையாக எண்ணெயை இருப்பு வைத்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றுடன் ஒப்பிடுகையில், மூலோபாய இருப்புகள் மற்றும் எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்களின் கையிருப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய இந்தியாவின் மொத்த சேமிப்புத் திறன் மிகக் குறைவு. அதாவது 74 நாட்களுக்கு மட்டுமே இருப்பு உள்ளது.

ஆனால், அதிகப்படியான கையிருப்பை பராமரிப்பதும் செலவுமிக்கது என்று கூறுகிறார் பரிக்.

"தற்போதைய நெருக்கடியான சூழலில், இருப்பை அதிகரிப்பதில் எந்தப் பயனும் இல்லை. ஏனெனில் இது மிகவும் செலவுமிக்கதாக இருக்கும். ஒரு பேரல் 120 அல்லது 110 டாலர் விலையில் வாங்கும்போது, அதைச் சேமித்து வைப்பதில் நியாயம் இல்லை. விலை 60 டாலர் அல்லது அதற்கும் குறைவாக இருந்தபோது நாம் இருப்பை அதிகரித்திருக்க வேண்டும்" என்று அவர் கூறுகிறார்.



# நிலவில் காற்றே இல்ல.. ட்ரோன் எப்படி பறக்கும்? 'மூன்ஃபால்' ரகசியம்!

நிலவில் வளிமண்டலம் இல்லை, பின் எப்படி ட்ரோன்கள் பறக்கும்? இந்தச் சவாலுக்கு விடை சொல்லும் விதமாக நாசா தனது 'மூன்ஃபால் ட்ரோன்' (Moonfall Drones) திட்டத்தை வடிவமைத்துள்ளது.

விண்வெளி ஆய்வில் மனிதகுலத்தின் அடுத்த இலக்கு நிலவில் நிரந்தரமாகத் தங்குவதுதான். இதற்காக நாசா மேற்கொண்டு வரும் 'ஆர்டெமிஸ்' திட்டத்தில், ஒரு மிகப்பெரிய சவால் காத்திருக்கிறது. அதுதான் நிலவின் தென்துருவத்தில் உள்ள ஆழமான, இருள் சூழ்ந்த பள்ளங்களை ஆய்வு செய்வது. சாதாரண ரோவர்களால் (Rovers) செல்ல முடியாத இத்தகைய கரடுமுரடான இடங்களை ஆராய, நாசா இப்போது 'மூன்ஃபால் ட்ரோன்கள்' (Moonfall Drones) எனும் புரட்சிகரமான தொழில்நுட்பத்தைக் கையில் எடுத்துள்ளது. நிலவில் காற்று இல்லாத சூழலிலும், ஒரு ராக்கெட்டைப் போல விண்ணில் எழும்பி, ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு 'குதித்து' செல்லும் இந்த நவீன ட்ரோன்கள், நிலவு ஆய்வின் போக்கையே மாற்றப்போகின்றன.

நிலவின் மிகக் கடினமான மற்றும் மனிதர்களால் சென்றடைய முடியாத பகுதிகளை ஆய்வு செய்வதற்காக, 'மூன்ஃபால் ட்ரோன்கள்' என்ற புதிய மற்றும் நவீனத் திட்டத்தை நாசா உருவாக்கி வருகிறது. நிலவின் தென் துருவப் ð°FJ™ (Lunar South Pole) ஆய்வு மேற்கொள்வதே



இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். நிலவில் காற்று இல்லையே.. இது எப்படிப் பறக்கும்?

பூமியில் உள்ள ட்ரோன்கள் காற்றைப் பயன் படுத்திப் பறக்கின்றன. ஆனால் நிலவில் வளிமண்டலம் (Atmosphere) கிடையாது. எனவே, இந்த ட்ரோன்கள் வழக்கமான முறையில் பறக்காது.

இந்த ட்ரோன்கள் சிறிய ரக ராக்கெட்டுகளைப் போல செயல்படும். இவற்றில் உள்ள இன்ஜின்கள் மூலம் விசை கொடுக்கப்பட்டு, நிலவின் மேற்பரப்பில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு 'குதித்து குதித்து' (Hopping) செல்லும். ஒருமுறை குதித்து தரை இறங்க வெறும் 150 வினாடிகள் மட்டுமே ஆகும். இது அதிகபட்சமாக 1 கிலோமீட்டர் உயரம் வரை எழும்பி, சுமார் 50 கிலோமீட்டர் தூரம் வரை பயணம் செய்யும் திறன் கொண்டது.

நிலவில் மனிதர்கள் நிரந்தரமாகத் தங்குவதற் கான 'ஆர்டெமிஸ்' (Artemis) திட்டத்தின் ஒரு அங்கமாகவே இந்த ட்ரோன்கள் உருவாக்கப் படுகின்றன. ரோவர்களால் (Rovers) செல்ல முடியாத ஆழமான பள்ளங்கள், கரடுமுரடான பாறைகள் மற்றும் எப்போதும் இருள் சூழ்ந்த நிழல் படிந்த பகுதிகளில் இந்த ட்ரோன்கள் ஆய்வு நடத்தும்.

இந்த 'மினி லேண்டர்' போன்ற ட்ரோன்களில் நவீன வசதிகள் இடம்பெற்றுள்ளன. சூரிய ஆற்றலைப் பெற சோலார் பேனல்கள் மற்றும் மின்சாரத்தைச் சேமிக்க பேட்டரி பேக்குகள். நிலவின் மேற்பரப்பிற்கு அடியில் உள்ளவற்றை ஆராய 'கிரவுண்ட் பெனட்ரேட்டிங் ரேடார்' மற்றும் உயர்தரப் புகைப்படங்களை எடுக்க ஆப்டிகல் கேமராக்கள்.

திசையை மாற்றவும், நிலையாகத் தரை இறங்கவும் பிரத்யேக இன்ஜின்கள் மற்றும் ஏவியோனிக்ஸ் (Avionics) வசதிகள். நில வின் இரவு நேரங்களில் வெப்பநிலை மிகக் கடுமையாகக் குறையும். அந்த உறைபனிக் குளிரிலும் மின்னணு பாகங்கள் பழுதடையாமல் வேலை செய்யும் வகையில் இந்த ட்ரோன்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டம் வெற்றியடைந்தால், நிலவில் மனிதர்கள் தங்குவதற்குத் தேவையான நீர் மற்றும் தாதுக்கள் எங்குள்ளன என்பதைக் கண்டறிய இது பெரும் உதவியாக இருக்கும். பாரம்பரிய ரோவர்களை விட மிக வேகமாக நிலவின் பரப்பை ஆராய இந்த 'மூன்ஃபால் ட்ரோன்கள்' வழிவகை செய்யும்

தொழில்நுட்பத்தின் வளர்ச்சி எல்லைகளற்றது என்பதற்கு இந்த 'மூன்ஃபால் ட்ரோன்கள்' ஒரு சிறந்த உதாரணம். நிலவின் கடுமையான உறைபனியையும், வளிமண்டலம் இல்லாத சூழலையும் ஒரு வாய்ப்பாக மாற்றி, நிலவின் ரகசியங்களை உடைக்க நாசா தயாராகிவிட்டது.

இந்தத் திட்டம் வெற்றியடையும் பட்சத்தில், நிலவில் மனிதர்கள் வாழ்வதற்குத் தேவையான நீர் மற்றும் தாதுக்கள் எங்குள்ளன என்பது துல்லியமாகத் தெரியவரும்.

வருங்காலத்தில் நிலவு என்பது வெறும் ஒரு செயற்கைக்கோளாக மட்டுமல்லாமல், மனிதகுலத்தின் மற்றொரு வாழ்விடமாக மாறுவதற்கு இந்தச் சிறிய 'ஹொப்பிங் ட்ரோன்கள்' (Hopping Drones) இடும் அடித்தளம் மிக முக்கிய மானது.

# மனிதன் இன்றி மரங்கள் வாழும் மரங்கள் இன்றி மனிதனால் வாழ முடியாது!’



1.  ஆலமரம், புளியமரம் புயல் வேகத்தை குறைக்கும்.
2.  அரச மரம் அதிகமான ஆக்சிஜனை உற்பத்தி செய்யும்.
3.  பனை மரம் நிலத்தடி நீரை பாதுகாக்கும்.
4.  வேப்பமரம் விஷத்தை முறிக்கும்.
5.  தென்னை மரம் மண் அரிப்பை தடுக்கும்.
6.  மனித இனம் இவற்றை அழிக்கும்.

நீர் வளம் காக்க நிறைய மரங்கள் வளர்ப்போம்

ஆகவே மரங்களை வளர்த்தால் மட்டுமே மழையை பெற முடியும்! மழை பெய்தால் மட்டுமே எல்லா உயிர்களும் வாழ முடியும்!

வீடுகளில் மரங்கள், கல்விக்கூடங்களில் மரங்கள், தொழிற்சாலைகளில் மரங்கள், நீரின் வளத்தை காப்பதற்காக மரங்கள், பறவைகளுக்கு இருப்பிடத்தை கொடுக்க மரங்கள் இப்படியாக எல்லாவற்றிற்கும் மரங்களே முக்கியம்.

மேற்கண்ட செயல்பாடுகளின் மூலமே நம்மால் மரத்தை வளர்க்க முடியும்! நம்முடைய மனிதத்தை காக்க முடியும்! வருங்கால சந்ததியினருக்கு வழிகாட்ட முடியும்!

வருங்கால மனிதர்களுக்கு பணம், பதவி, சொத்து ஆகியவற்றை விட்டுச் செல்வதற்குப் பதிலாக, உயிருக்கும் மேலாக இருக்கும் மரங்களை அவர்களுக்கு விட்டுச் சென்று வளமான வாழ்வை உருவாக்குவோம்.



# விமானப் பராமரிப்பு செலவு

தில்லியில் பொது மேளாளராக இருந்தபோது 48, A320 விமானங்களை பாரமரிக்கும் பொறுப் பும் எனக்கு இருந்தது.

விமானப் பராமரிப்பு செலவு எவ்வளவு அதிகமாக இருக்கும் என்பது குறித்து எனது இரண்டு அனுபங்களை மட்டும் இங்கே பகிர் கிறேன்.

1989ல் முதலாவதாக A320, 31 விமானங்களை எங்கள் நிறுவனமும் வாங்கியது.

பல ஆண்டுகள் உபயோகத்திற்குப் பின் ஒரு கணினி வகை மிகுந்த பிரச்சினை கொடுத்துக்கொண்டே இருந்தது. எத்தனை முறை பழுது பார்த்தாலும். லட்சக்கணக்கான பணம் வீணாகிக் கொண்டே இருந்தது.

எங்களுக்கு பின்னால் உருவாக்கப்பட்ட விமானத்தில் அதே கணினியின் புதிய தலைமுறை அமைப்பு உபயோகத்திற்கு வந்தது.

சிறிய மாற்றங்கள் மூலம் எங்கள் விமானத்திலும் அந்த புதிய தலைமுறை கணினியை உபயோகப்படுத்த முடியும்.

அதற்கான முறையான அனுமதியை விமான உற்பத்தியாளரிடம் கேட்ட போது அதற்கு அவர்கள் கேட்ட தொகை சில மில்லியன் அமெரிக்க டாலர்கள் மட்டுமே.

ஏனெனில் அவர்களும் எங்கள் விமானங்கள் குறித்த அணைத்து ஆவணங்களிலும் மாற்றம் செய்தாக வேண்டும்.

நாங்கள் அவர்களிடம் முதன்மை வாடிக்கையாளர் என்ற முறையில் பலமுறை பேசி முடிவில் எந்த வித செலவும் இல்லாமல் அனுமதி பெற்றோம்

கவனிக்கவும் புதியதலைமுறை கணினிகள் விலை (பல கோடிகள்) தனி.

அடுத்து நான் கூற விரும்புவது முன் சக்கர தாங்கும் அமைப்பு (Nose oleo strut)

இதில் சக்கரங்களை திசை மாற்றும் போது அதை வரைப்படுத்தும் பிடிப்பான் (Lug) உள்ளது. அது உடைந்து விட்டால் சக்கரங்கள் ஒரு நிலையில்லாமல் 360 பாகை சுற்றும்.

மூன்று விமானங்களில் அது உடைந்து விட்டது. விமானத்தின் முன் பகுதியை தாங்கி வைத்து தான் அதை கழற்ற வேண்டும்.

பின் அதை பாதுகாப்புடன் மரபெட்டகத்தில் வைத்து இங்கிலாந்து நாட்டிற்கு அனுப்பினால் அவர்கள் பிடிப்பானை மாற்றிவிட்டு மீண்டும் நமக்கு அனுப்புவார்கள். மாற்றுவது இலவசம் ஏனேனில் அது அவர்களின் உற்பத்தி குறைபாடு.

ஆனாலும் மூன்றும் அந்த நாட்டிற்கு அனுப்பி சுங்கச் சோதனைகள், விமானத்தில் இடம் போன்றவைகளுக்காக (Logistics) பல லட்சக்கணக்கான ரூபாய்கள் மற்றும் மூன்று மாதங்கள் செலவாகும்.

நாங்கள் அந்த நிறுவனத்திடம் பேசி அவர்களை இங்கேயே வரவழைத்து இரண்டே நாட்களில் மூன்றையும் சரி செய்து விட்டோம்.

மேலே கூறிய இரண்டிற்கும் பழுது பார்க்கும் செலவு இல்லாமல் மற்ற செலவுகள் பற்றி கூறப்பட்டதாகும்.

மேலும் உதரி உறுப்புக்கள் (spare parts )உடனடியாக கிடைக்காது. பல மாதங்கள் (Lead time) காத்திருக்க வேண்டும். ஆர்டர் கொடுக்கும் போது பணம் கட்ட வேண்டும்.

நமக்கு ஒதுக்கப் படும் பணமும் வாராவாரம் வரையறுக்கப்படும். அதில் எது முக்கியம் எவ்வளவு காலம் ஆகும் போன்றவைகளை தீர்மானிக்க வேண்டும்.



# ஒரு மணி நேரத்தில் 60 நிமிடங்கள் இருப்பதற்கான காரணம் என்ன?

5,000 ஆண்டுகள் பழமையான ஒரு மர்மமான முடிவு, இன்றும் நாம் நேரத்தைக் கணக்கிடும் முறைக்கு நேரடி காரணமாக அமைந்தது.

அக்டோபர் 1793இல், புதிதாக நிறுவப்பட்ட பிரெஞ்சு குடியரசு ஒரு துரதிர்ஷ்டவசமான சோதனையைத் தொடங்கியது. அந்த சோதனை நேரத்தை மாற்ற முடிவு செய்தது.

இனி ஒரு நாள் 24 மணிநேரத்திற்குப் பதிலாக 10 மணிநேரங்களாகப் பிரிக்கப்படும் என்றும், ஒவ்வொரு மணிநேரமும் 100 ' நிமிடங்களை' கொண்டிருக்கும், அவை ஒவ்வொன்றும் 100 ' விநாடிகளால்'ஆனவை என்றும் புரட்சியாளர்கள் முடிவு செய்தனர்.

இந்த நேர முறைமை ஒரு விரிவான புரட்சிகர காலண்டரின் ஒரு பகுதியாகும், இது புதிய 10 நாள் வாரத்தை உள்ளடக்கிய ஆண்டின் கட்டமைப்பை பகுத்தறிவு ரீதியாக்குவதை (மற்றும் கிறிஸ்தவமயமாக்கலை நீக்குவதை) நோக்கமாகக் கொண்டது.

தற்போதுள்ள கடிகாரங்களை இந்த தசம முறைக்கு மாற்றும் பணிகள் விரைவில் தொடங்கின.

நகர அரங்குகளில் தசம கடிகாரங்கள் பொருத் தப்பட்டன மற்றும் அதிகாரப்பூர்வ நடவடிக்கைகள் புதிய காலண்டரைப் பயன்படுத்திப் பதிவு செய் யப்பட்டன.

இது விரைவில் தீராத தலைவலியை ஏற்படுத் தத் தொடங்கியது என்று பிரிட்டனின் லண்டனில் உள்ள ராயல் மியூசியம்ஸ் கிரீன்விச்சின் அறிவியல் தொடர்பாளர் ஃபின் புரிட்ஜ் கூறுகிறார். இந்த அருங்காட்சியகம் தான் ராயல் வானியல் ஆய்வகம் அமைந்துள்ள இடம் மற்றும் கிரீன்விச் மீன்டைம் நிறுவப்பட்ட இடமாகும்.

ஏற்கனவே இருந்த கடிகாரங்களை மறுவடிவமைப்பு செய்வதும் மாற்றுவதும் மிகவும் கடினமாக இருந்தது.

இந்த முறை பிரான்சை அண்டை நாடு களிட மிருந்து தனிமைப்படுத்தியது, அதே நேரத்தில்

கிராமப்புற மக்கள் 10 நாட்களுக்கு ஒருமுறை மட்டுமே ஓய்வு நாள் வருவதை வெறுத்தனர். இறுதியில், இந்த தசம நேர முறை பிரான்சில் ஒரு வருடத்திற்கு மேல் நீடிக்கவில்லை.

இருப்பினும், ஒரு நாளைக்கு 24 மணிநேரம், ஒரு மணிநேரத்திற்கு 60 நிமிடங்கள் மற்றும் ஒரு நிமிடத்திற்கு 60 விநாடிகள் என்று நாம் எவ்வாறு கணக்கிடத் தொடங்கினோம், இன்றும் எப்படி கணக்கிடுகிறோம் என்பதைப் புரிந்துகொள்ள, காலக்கணிப்பு முறை தோன்றுவதற்கு முந்தைய காலத்திற்கு நாம் திரும்பிச் செல்ல வேண்டும்.

ஏனெனில் இது ஆரம்பகால எண் முறைமை களில் ஒன்றின் கதையாகும்.

இது தான் நம்மை இந்தப் பாதையில் பயணிக்கத் தூண்டியது.

மேலும் இந்தச் சிக்கலான முறை அதனை உருவாக்கிய நாகரிகங்களை விட நீண்ட காலம் நீடித்திருப்பதையும் இது விளக்குகிறது.

அறுபதின்ம முறையின் அடித்தளம்

இதன் தொடக்கத்தில் இருப்பவர்கள் சுமேரியர்கள்.

மெசபடோமியாவில் (தற்போதைய இராக் பகுதி) சுமார் கி.மு. 53001940 வரை வாழ்ந்த பழங்கால மக்கள் மற்றும் நகரங்களை உருவாக்கிய முதல் நாகரிகங்களில் சுமேரியர்களும் அடங்குவர்.

நீர்ப்பாசனம் மற்றும் ஏர் உழுதல் உள்ளிட்ட பல கண்டுபிடிப்புகளுடன், முதன்முதலில் அறியப்பட்ட எழுத்து முறையை உருவாக்கிய பெருமையும் இவர்களையே சாரும். இது 60ஐ அடிப்படையாகக் கொண்ட ஒரு எண் முறையை உள்ளடக்கியிருந்தது.

உங்கள் கையை உங்களுக்கு முன்னால் உயர்த்திப் பிடித்து, ஒரு விரலை மடக்கிப் பார்த்தால் அதில் மூன்று மூட்டுகள் இருப்பதைக் காண்பீர்கள்.

ஒரு கையின் விரல்களில் உள்ள அனைத்து மூட்டுகளையும் (கட்டைவிரலைத் தவிர) எண்ணினால் 12 வரும்.

உங்கள் மற்றொரு கையின் ஒரு விரலைப் பயன்படுத்தி இந்த 12ஐ ஒன்று எனக் கணக்கிட்டு, மீண்டும் முதல் கையில் 12 வரை எண்ணைத் தொடங்குங்கள். உங்கள் இரண்டாவது கையின் ஐந்து விரல்களும் பயன்படுத்தப்படும் வரை இதைச் செய்யுங்கள். இப்போது நீங்கள் எதை எட்டியிருப்பீர்கள்? அறுபது.

சுமேரியர்கள் தங்களின் வளர்ந்து வரும் கணித முறையை 10ஐ அடிப்படையாகக் கொள்ளாமல், 60ஐ அடிப்படையாகக் கொண்டு ஏன் உருவாக்கினார்கள் என்பது குறித்த ஊகக் கோட்பாடுகளில் இதுவும் ஒன்று. இந்த முடிவு இன்றும் நாம் நேரத்தை அளவிடும் முறையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

வளர்ந்து வரும் தங்கள் நகரங்களுக்கு ஆதாரமாக விளங்கிய, மேலும் பெரிதாகவும் சிக்கலாகவும் மாறிய விவசாய முறையைப் பதிவு செய்ய வேண்டிய அவசியமே, அவர்கள் எண்களை எழுதத் தூண்டுகோலாக இருந்தது என்கிறார் கனடாவின் நியூ பிரன்சுவிக் பல்கலைக்கழகத்தின் கியூனிஃபார்ம் (பண்டைய மத்திய கிழக்கின் ஆரம்பகால எழுத்து முறைகள்) கலாச்சார நிபுணர் மார்ட்டின் வில்லிஸ் மன்ரோ.

எண்களைக் குறித்து வைப்பதற்காக, அவர்கள் பெரும்பாலும் ஸ்மார்ட்போன் அளவு அல்லது அதைவிட சிறியதான சிறிய களிமண் பலகைகளைப் பயன்படுத்தத் தொடங்கினர். மென்மையான களிமண்ணில் விவரங்களைப் பொறித்தனர். விரைவில் மற்ற சித்திரக் குறியீடுகளும் தோன்றி, சுமேரியர்களின் புகழ்பெற்ற கியூனிஃபார்ம் வடிவ எழுத்துகளாக வளர்ந்தன .

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில்தான் இந்த களிமண் பலகைகள் கண்டறியப்பட்டு அதன் பொருள் அறியப்படத் தொடங்கியது.

சுமேரியர்கள் பலவிதமான எண் முறைகளைப் பயன்படுத்தியதை அவை காட்டுகின்றன.

ஆனால் கணிதத்திற்கும், அதன் மூலம் வானியல் மற்றும் நேரத்திற்கும் மிக முக்கியமானதாக 'செக்ஸாஜெசிமல்' எனப்படும் அறுபதின்ம முறை (60ஐ அடிப்படையாகக் கொண்ட) முறை உருவானது என்கிறார் மன்ரோ.

நாம் இப்போது 10ஐப் பயன்படுத்துவது போன்றே சுமேரியர்கள் 60ஐப் பயன்படுத்தினர்.

நாம் ஒன்பதை எட்டும்போது, இடதுபுறம் ஒரு இடத்திற்கு நகர்ந்து ஒன்றை எழுதி, வலதுபுறம் பூஜ்ஜியத்தைச் சேர்க்கிறோம் என்று அமெரிக்காவின் பிரவுன் பல்கலைக்கழகத்தில் துல்லியமான அறிவியல் மற்றும் தொல்பொருள் வரலாற்றில் முனைவர் பட்டம் பெற்ற எரிகா மெஸாரோஸ் கூறுகிறார்.

"அறுபதின்ம முறைமைக்கும் இதுவே பொருந்தும். அவர்கள் 59 வரை சென்றுவிட்டு, 59ஐ விட அதிக எண்ணைக் கொண்டிருப்பதற்குப்



பதிலாக ஒரு இடத்திற்குத் தள்ளி ஒன்றை மட்டும் பயன்படுத்துகிறார்கள்"என்று அவர் குறிப்பிட்டார்.

மேலே கூறப்பட்ட விரல் எண்ணும் கோட்பாடு கவர்ச்சிகரமாக இருந்தாலும், சுமேரியர்கள் ஏன் 60ஐ அடிப்படையாகக் கொண்ட முறையைத் தேர்ந்தெடுத்தார்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

"60 எங்கிருந்து வந்தது என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை" என்று மன்ரோ கூறுகிறார். இந்த முறை சுமேரியர்களுக்கு முன்பே இருந்திருக்கலாம் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

இருப்பினும், இதன் பயன்பாட்டு எளிமை தெளிவாக உள்ளது.

பின்னங்கள் அல்லது தசமங்கள் தேவையின்றி 60ஐ ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, 10, 12, 15, 20, 30 மற்றும் 60 ஆகிய எண்களால் வகுக்க முடியும். 10ஐ ஒன்று, இரண்டு, ஐந்து மற்றும் 10ஆல் மட்டுமே வகுக்க முடியும் என்பதோடு ஒப்பிடும்போது இதன் நன்மைகள் புரியத் தொடங்கும்.

"கணக்கியல், வரிகள் அல்லது நிலங்களை அளவிடுதல் மற்றும் வாரிசுரிமைக்காக நிலங்களைப் பிரித்தல் போன்ற நடைமுறை நோக்கங்களுக்காக நீங்கள் எண்களை உருவாக்குகிறீர்கள் என்றால், இந்த கணிதச் செயல்பாடுகளைச் செய்ய எளிதான வழி இருப்பது மிகவும் உதவியாக இருக்கும்" என்கிறார் மெஸாரோஸ்.

காலத்தின் தோற்றம்

சுமேரியர்கள் நேரத்தைப் பயன்படுத்தியதற்கான தெளிவான சான்றுகள் இல்லை என்றாலும், கி.மு. 1000இல் பாபிலோனியர்களால் (சுமேரியர்களுக்குப் பிறகு வந்த ஒரு பண்டைய மெசபடோமிய நாகரிகம்) சூரியக் கடிகாரங்கள் மற்றும் நீர்க்கடிகாரங்கள் முதன்முதலில் ஆவணப்படுத்தப்படுவதற்கு முன்னரே அந்தப் பிராந்தியத்தில் காலக்கணிப்பு முறை இருந்திருக்க வாய்ப்புள்ளது என்று மன்ரோ கூறுகிறார்.

ஒரு நாளை மணிநேரங்களாகப் பிரித்ததாக அறியப்படும் முதல் நாகரிகம் பண்டைய எகிப்தியர்களுடையது தான் என்று சுவிட்சர்லாந்தின் பாசல் பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் வானியலாளர் ரீட்டா கௌட்ச்சி கூறுகிறார்.

இது கி.மு. 2500ஆம் ஆண்டைச் சேர்ந்த மத நூல்களில் காணப்படுகிறது.

மணிநேரங்கள் தொடர்பாக முதலில் அறியப்பட்ட பொருட்கள் ஆரம்பத்தில் இரவின் 12 மணிநேரங்களைக் குறிக்கின்றன.

இவை கி.மு. 2100 மற்றும் 1800க்கு இடைப்பட்ட காலத்தில் எகிப்திய பிரபுக்களின் சவப்பெட்டிகளின் உட்புற மூடியில் காணப்பட்ட டயகனால் ஸ்டார் கிளாக் என்று கௌட்ச்சி விளக்குகிறார்.

எகிப்தியர்கள் ஏன் சரியாக 12 என்ற உட்பிரிவைத் தேர்ந்தெடுத்தார்கள் என்பது உறுதியாகத் தெரியவில்லை .

இதுவே இறுதியில் முழு நாளிலும் 24 மணிநேரங்கள் ஏற்பட வழிவகுத்தது.

எகிப்தியர்கள் 12 விண்மீன் தொகுப்புகளைக் கொண்ட ஒரு ராசி சுழற்சியைக்

கொண்டிருந்தனர், ஆனால் இது 12 மணிநேரங்கள் குறித்த முதல் குறிப்புகளுக்குப் பின்னரே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கலாம்.

ஒரு கையின் விரல்கள் மற்றும் மூட்டுகளைப் பயன்படுத்தி 12 வரை எண்ணுவது மற்றொரு சாத்தியமாகும். அவர்கள் தேர்ந்தெடுத்த 10 நாள் வாரம் என்ற கணக்கு சில நட்சத்திரங்களின் தெரிவுநிலையுடன் எவ்வாறு இணைந்தது என்பதன் காரணமாகவும் இது இருக்கலாம் என்று சில நிபுணர்கள் கருதுகின்றனர்.

நேரத்தை அளவிடுவதற்கான ஆரம்பகால கருவிகளான சூரியக் கடிகாரங்கள் மற்றும் நீர்க்கடிகாரங்கள் கி.மு. 1500இல் எகிப்தில் தோன்றின.

அவற்றில் சில அன்றாட வேலைகளின் போது பயன்படுத்தப்பட்டன, ஆனால் பெரும்பாலானவை காலக்கணிப்பை விட "மத ரீதியான சடங்குகள் மற்றும் வழிபாடுகளுடன் தொடர்புடையதாகவே" இருந்திருக்கலாம் என்று கௌட்ச்சி கூறுகிறார்.

"தனிப்பட்ட முறையில், அவற்றில் பல கடவுள்களுக்கு வழங்கப்பட்ட காணிக்கைகள் அல்லது நேர்த்திக்கடன்கள் என்று நான் நினைக்கிறேன்," என்று கூறும் அவர், "அந்தக் காலத்தின் அறிவியல் பூர்வமான காலக்கணிப்பு குறித்து எங்களிடம் அதிக தகவல்கள் இல்லை"என்றும் குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில், அன்றாட வாழ்க்கை மற்றும் வணிகம் குறித்த நூல்களில், மிகச்சிறிய நேர அலகு பொதுவாக வேலை மாற்றமாகவே இருந்தது, இது பொதுவாகக் காலை அல்லது மதியம் என்று கற்பனை செய்யப்பட்டது என்று கௌட்ச்சி கூறுகிறார்.

ஆனால் பண்டைய எகிப்தின் ரோமானிய காலத்திலிருந்து (கி.மு. 30 முதல்), மணிநேரங்கள் ஒரு தரநிலையாக மாறின, அதனுடன் அரை மணிநேரங்களும் தோன்றத் தொடங்கின என்றும் அவர் தெரிவித்தார்.

நிமிடங்களின் வருகை

இதற்கிடையில், பாபிலோனியர்களும் மணிநேரங்களைப் பயன்படுத்துவதில் முன்னேற்றம் கண்டுவந்தனர். நேரத்தைக் கணக்கிடும் நோக்கத்திற்காக இல்லாவிட்டாலும், ஒரு மணிநேரத்தை மிகச்சிறிய அலகுகளாகப் பிரித்த முதல் நபர்களாக இறுதியில் அவர்களே இருந்தனர்.

கி.மு. 2000 முதல் கி.மு. 540 வரை



செழித்தோங்கிய பாபிலோனியர்கள், சுமேரியர்களிடமிருந்து கியூனிஃபார்ம் எழுத்து முறை மற்றும் அறுபதின்ம எண் முறை ஆகிய இரண்டையும் ஏற்றுக்கொண்டனர்.

கி.மு. 1000ஆம் ஆண்டில், சூரியன் வானில் மீண்டும் அதே நிலைக்குத் திரும்ப எடுக்கும் காலத்தை (360 நாட்களுக்குச் சற்று அதிகம்) அடிப்படையாகக் கொண்ட ஒரு காலண்டரை அவர்கள் உருவாக்கியிருந்தனர் என்று மெஸாரோஸ் கூறுகிறார்.

ஏற்கனவே 60ஐ அடிப்படையாகக் கொண்ட எண்ணும் முறையைப் பயன்படுத்தும் ஒரு நாகரிகத்திற்கு இது ஒரு வசதியான எண்ணாக இருந்தது.

"60ஐ அடிப்படையாகக் கொண்ட முறையில் இது எவ்வளவு சிறப்பாக இருக்கிறது பாருங்கள்" என்கிறார் மெஸாரோஸ்.

"உண்மையில், இது தலா 30 நாட்களைக் கொண்ட 12 மாதங்களுக்கு மிகச் சரியாக வழிவகுத்தது" இது நிலவு சுழற்சியுடனும் ஒத்துப்போனது என்றும் அவர் கூறுகிறார்.

எகிப்தியர்களைப் போலவே, பகலையும் இரவையும் தலா 12 ஆகப் பிரிக்கும் அன்றாட பயன்பாட்டிற்கான நடைமுறை நேர முறையை பாபிலோனியர்கள் உருவாக்கினர்.

இந்த "பருவகால மணிநேரங்களின்" நீளம், பகல் மற்றும் இரவின் நீளத்தைப் பொறுத்து மாறுபடும். "இரவு வானத்தை 12 மாதங்களாகவும் 12 ராசிகளாகவும் பிரிப்பதால், பகலையும் 12 ஆகப் பிரித்தோம்" என்கிறார் மெஸாரோஸ்.



வேறு பல பண்டைய நாகரிகங்களும் பருவகால மணிநேரங்களைப் பயன்படுத்தின, அவை 15ஆம் நூற்றாண்டு ஐரோப்பாவிலும் 19ஆம் நூற்றாண்டு ஜப்பானிலும் பயன்பாட்டில் இருந்தன.

இருப்பினும், இந்த பருவகால நேரம் நடைமுறை பயன்பாட்டிற்காக ஒருபோதும் சிறிய அலகுகளாகப் பிரிக்கப்படவில்லை என்று மன்ரோ குறிப்பிடுகிறார். "[அது] நவீன காலத்தின் ஆரம்பம் வரை ஒரு விஷயமாகவே இல்லை... மெசபடோமியா மற்றும் பிற பண்டைய கலாச்சாரங்களில் அது இல்லை, ஏனென்றால் அதற்கு உண்மையில் எந்தத் தேவையும் இருக்கவில்லை"என்று அவர் விளக்கினார்.

பாபிலோனியர்கள் வானியல் நிகழ்வுகளைக் கணக்கிடுவதற்கும் அளவிடுவதற்கும் மற்றொரு நேர முறையை உருவாக்கினர், ஆனால் இது அன்றாட பயன்பாட்டிற்கானது அல்ல.

இது ஒரு நாளை 12 "பெரு" ஆகப் பிரித்தது, இதனை நவீன காலத்தின் இரண்டு மணிநேரங்களுக்குச் சமமாகக் கருதலாம். இதைப் பயன்படுத்திய ஒரே பண்டைய கலாச்சாரம் பாபிலோனியா மட்டுமல்ல. உதாரணமாக, இவை பண்டைய சீனா மற்றும் ஜப்பானிலும் காணப்பட்டன.

தங்கள் கணக்கீடுகளில் இன்னும் நுணுக்கமான அளவீடுகளின் தேவை காரணமாக, பாபிலோனியர்கள் இந்த இரண்டு மணிநேர 'பெரு' அலகுகளை 'உஷ்' எனப்படும் 30 பண்டைய நிமிடங்களாகப் பிரிக்கத் தொடங்கினர்.

இதில் ஒவ்வொரு நிமிடமும் நமது தற்போதைய நான்கு நிமிடங்களுக்குச் சமம்.

இவை மேலும் 60ஆல் வகுக்கப்பட்டு 'நிண்டா' எனப்படும் சிறிய அலகுகளாகப் பிரிக்கப்பட்டன, அவை ஒவ்வொன்றும் சுமார் நான்கு நவீன வினாடிகளுக்குச் சமம்.

"அறுபதின்ம முறைமையில் நாம் விஷயங்களை 60 குழுக்களாகப் பிரிப்பதாலேயே" இந்த உட்பிரிவுகள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று மெஸாரோஸ் கூறுகிறார்.

இருப்பினும், பாபிலோனியர்கள் இதனை "நேரத்தைப் பிரிப்பதாக நினைக்கவில்லை" என்றும், "அவர்கள் இதனை வானில் தூரத்தை அளவிடும் எண்களை அல்லது கிரகங்களின் வேகத்தைப் பிரிப்பதாகவே நினைத்தார்கள்"என்றும் மன்ரோ குறிப்பிடுகிறார்.

இதுபோன்ற அனைத்து பண்டைய கால வளர்ச்சி முறைகளிலும் யார் யாருடைய கருத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கினார்கள் என்று துல்லியமாகக் கூறுவது கடினம் என்று கௌட்ச்சி கூறுகிறார்.

"சுமார் கி.மு.330 முதல், அலெக்ஸாண்ட்ரியாவில் புதிய அறிவியல் மையம் உருவானதால், எகிப்து, அனைத்துப் பகுதிகளிலிருந்தும் மக்கள் மற்றும் அவர்களின் கருத்துக்கள் ஒன்றிணைந்த ஒரு சங்கமமாக மாறியது," என்று கூறும் அவர், "இதைத்தான் நாம் ஹெலனிஸ்டிக் உலகம் என்று



அழைக்கிறோம்"என்றும் அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும், பண்டைய கிரேக்கர்கள் பாபிலோனிய வானியல் நேர முறையை ஏற்றுக்கொண்டனர் என்பது தெளிவாகிறது என்று மெஸாரோஸ் கூறுகிறார்.

மேலும், "அவர்கள் அதே பிரிவை வைத்திருந்தனர், ஏனெனில் இது ஏற்கனவே உள்ள கண்டுபிடிப்புகளுடன் புதியவற்றைச் சேர்க்க அவர்களுக்கு அனுமதி அளித்தது... இது பாபிலோனியர்களுக்கு நன்றாக வேலை செய்த ஒரு அமைப்பாக இருந்ததால், அவர்களுக்குப் பின் வந்தவர்கள் வானியல் தரவு மற்றும் மரபுகளைப் பெறுவதற்காக அதை அதை முழுமையாக ஏற்றுக்கொண்டனர்"என்றும் அவர் விளக்கினார்.

வினாடிகளை எண்ணுதல்

மக்கள் பேசுவதற்கு சமமான நேரம் கிடைப்பதை உறுதி செய்வதற்காக" கிரேக்கர்கள் தங்கள் அரசவையில் மணல் கடிகாரங்களை வைத்திருந்தாலும், அவர்கள் ஏற்றுக்கொண்ட பாபிலோனிய நேர முறையானது ஜோதிடர்களால் கருத்தியல் ரீதியாக மட்டுமே பயன்படுத்தப்பட்டது மற்றும் பெரும்பாலும் "அன்றாட வாழ்க்கைக்கு உண்மையில் பொருத்தமற்றதாக இருந்தது" என்று கௌட்ச்சி கூறுகிறார்.

ஆனால் ஹெலனிஸ்டிக் கலாச்சார சங்கமத்திலிருந்து உருவான மணிநேரம், நிமிடங்கள் மற்றும் வினாடிகள் போன்ற கருத்துக்கள் பல நூற்றாண்டுகளைக் கடந்து இன்றைய நாள் வரை வந்துள்ளன.

இருப்பினும், சில நூறு ஆண்டுகளுக்கு முன்புதான் நிமிடங்களும் விநாடிகளும் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் அளவிற்கு காலக் கணிப்புக் கருவிகள் துல்லியமானதாக மாறின.

வினாடி என்பது இப்போது எண்ணற்ற அறிவியல் வரையறைகளில் பயன்படுத்தப்படுகிறது, மேலும் வினாடியை விடச் சிறிய நேர அலகுகளைக் கணக்கிடத் தொடங்கியவுடன், விஞ்ஞானிகள் மெட்ரிக் முறைக்கு மாறி, அதனை மில்லி மற்றும் மைக்ரோ விநாடிகளாக (முறையே ஒரு வினாடியின் ஆயிரத்தில் ஒரு பங்கு மற்றும் மில்லியனில் ஒரு பங்கு) பிரித்தனர்.

20ஆம் நூற்றாண்டில், அணு கடிகாரங்கள் வினாடியை துல்லியமாக மறுவரையறை செய்ய செய்ய விஞ்ஞானிகளுக்கு உதவின.

சூரியனின் சுழற்சியை அடிப்படையாகக் கொண்ட வரையறையிலிருந்து, சீசியம்133 அணுக்களால் மைக்ரோவேவ் கதிர்வீச்சை உறிஞ்சுதல் மற்றும் உமிழ்தல் அடிப்படையிலான துல்லியமான மதிப்பிற்கு அது மாறியது.

இன்று, நமது உலகளாவிய அணு கடிகாரங்களின் வலையமைப்பு கிட்டத்தட்ட அனைத்து நவீன கடிகாரங்களின் நேரத்தையும்




பராமரிக்கிறது, மேலும் இது இணையம் முதல் ஜிபிஎஸ் மற்றும் அதிநவீன எம்ஆர்ஐ இமேஜிங் வரை அனைத்திற்கும் பின்னணியாக உள்ளது .

இருப்பினும், கால கணக்கீட்டின் வரலாற்றைக் கண்டறியும்போது, அது உண்மையில் மனிதர் களால் உருவாக்கப்பட்ட ஒன்று என்பதும், மனித முடிவுகளால் தீர்மானிக்கப்பட்டது என்பதும் வெளிப்படுகிறது.

மணிநேரம், நிமிடங்கள் மற்றும் வினாடிகள் ஆகியவை தொடர்ச்சியான தேர்வுகள், தற்செயல்கள் மற்றும் நிகழ்வுகள் மூலமாக நம்மிடம் வந்தடைந்தன.

ஆனால் அவை பல நூற்றாண்டுகளாகப் பயனுள்ள பாரம்பரியமாக நம்மிடம் நிலைத்து விட்டன. பண்டைய காலத்தின் இந்தத் தாக்கம் எவ்வளவு ஆழமாகப் பதிந்துள்ளது என்றால், இப்போது இந்த அமைப்பை மாற்றுவது கையாளு வதற்கு மிகவும் கடினமான ஒன்றாக இருக்கலாம்.

18 ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ் நேரத்தைத் தசம முறைப்படுத்த முயன்றபோது கூட, நடைமுறையில் அந்தப் புதிய முறை அரிதாகவே பயன்படுத்தப்பட்டது . அதே சமயம் , குடியரசின் தூர அளவீடுகளையும் நாணயத்தையும் தசம முறைப்படுத்துவதற்கான இதே போன்ற முயற்சிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

தசம நேர முறை வெறும் 17 மாதங்கள் மட்டுமே நீடித்தது, இருப்பினும் அந்த நாட்காட்டி சுமார் ஒரு தசாப்த காலத்திற்கு ஓரளவு பயன்பாட்டில் இருந்தது.

"இது தொடர்பாக முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் அது தோல்வியடைந்தது,அது மக்களி டையே எடுபடவில்லை," என்று புரிட்ஜ் கூறுகிறார்.

1795ஆம் ஆண்டு பிரெஞ்சு தேசிய மாநாட்டின் உறுப்பினரான கிளாட்அன்டோயின் பிரியர் ஆற்றிய உரையே, தசம நேர முறைக்கு முற்றுப்புள்ளி வைத்ததாக இருந்திருக்கலாம்.

இது யாருக்கும் எந்தவிதமான குறிப்பிடத்தக்க நன்மையும் அளிக்கவில்லை என்பதோடு மட்டுமல்லாமல், மற்ற புதிய மெட்ரிக் அளவீட்டு முறைகள் மீது இது ஒரு கெட்ட பெயரை உருவாக்குவதாகவும், அவை இதற்கு மாறாகப் பயனுள்ளவை என்றும் அவர் கூறினார்.

– ஜோஸ்லின் டிம்பர்லி

அருள்தரும்

# தெய்வம்

என்றும் நம் இல்லங்களில்

தமிழ் மாதமிருமுறை இதழ்

மாதம் தோறும்
இரு இதழ்களாக
வெளிவரும்

**அருள்தரும்**
**தெய்வம்**

இதழின் சந்தாதாரர்
ஆகுங்கள்

- 1 வருட சந்தா ரூ.399
- 2 வருட சந்தா ரூ.699
- 3 வருட சந்தா ரூ.999

**பரிசை அள்ளுங்கள்?**

நிர்வாக அலுவலகம்

## PADMA MEDIA HOUSE

No.116, EH Road, Gandhi Nagar ,
Tondiarpet, Chennai-600081

சந்தா செலுத்த அருகில் உள்ள க்யூஆர் கோட்
ஸ்கேன் செய்யவும் மேலும்தொலைபேசி எண்ணில்
தொடர்பு கொண்டு சந்தாதாரர் ஆகுங்கள்

PhonePe
ACCEPTED HERE
Scan & Pay Using PhonePe App
MS PADMA MEDIA HOUSE

சந்தா மற்றும் அனைத்து விபரங்களுக்கும்

அலைபேசி எண்: 9337501889

அன்றாடச் செய்திகளை துல்லியமாக தரும்

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com










எந்தவித மறை முக கட்டணமும் இல்லை

**சந்தா, சப்ஸ்கிரிப்ஷன் இல்லை,**

உங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை எங்களுக்கு தெரியபடுத்துங்கள், **நமது இ–பேப்பரை படித்து பயன்பெறுங்கள்,**




**Whatsup no.8122664699**

TamilnaduEpaper.com